# சிக்கண்ணா
# அரசு கலைக் கல்லூரி
# திருப்பூர்




## ஆண்டு மலர்
## 2022-2023




தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் நடைபெற்ற 45 நாட்கள் பயிற்சியின் நிறைவு விழா




20-04-2023 அன்று குமரன் அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு வாசிப்பு இயக்கம் தொடக்க விழா மற்றும் உலக புத்தக தின விழா



04-11-2022 அன்று திறந்த வெளிக் கலை அரங்கில் நடைபெற்ற 50 - ஆவது பட்டமேற்பு விழாவில் சிறப்பு விருந்தினர் கல்வியாளர் திரு.பு.பா.பிரின்ஸ் கஜேந்திர பாபு அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்திய போது




04.11.2022 அன்று நடைபெற்ற 50 ஆவது பட்டமேற்பு விழாவில் சிறப்பு விருந்தினர், கல்வியாளர் திரு.பு.பா.பிரின்ஸ் கஜேந்திர பாபு அவர்களுடன் பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்றவர்கள்




03-11-2022 அன்று திறந்த வெளிக் கலை அரங்கில் நடைபெற்ற 49 - ஆவது பட்டமேற்பு விழாவில் தமிழ்நாடு அரசு மேனாள் காவல்துறை இயக்குநர் முனைவர் மு. இரவி அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்திய போது




கோவை பாரதியார் பல்கலைக்கழக 2021 ஏப்ரல் தேர்வுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்கள் பட்டமேற்பு விழாவில் சிறப்பு விருந்தினருடன்

# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி

(பாரதியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது
தேசிய தர மதிப்பீட்டுக் குழு (NAAC) வின்
B மதிப்பு பெற்றது)
கல்லூரி சாலை, திருப்பூர் - 641 602.



காய்நெல் லறுத்துக் கவளங் கொளினும்
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்த நெறிய றிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே.
(புறநானூறு - 184, பிசிராந்தையார்)

**ஆண்டு மலர்**
**2022 - 2023**

# மலர்க்குழு

<u>தலைவர்</u>

**முனைவர் வ.கிருஷ்ணன்**

கல்லூரி முதல்வர்

<u>முதன்மை ஆசிரியர்கள்</u>

**முனைவர் சி.அமிர்தராணி**

வணிகவியல் துறை இணைப் பேராசிரியர்

**திரு. இரா.செங்கமுத்து**

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்

**முனைவர் லா.ரூபி கிறிஸ்டி**

ஆங்கிலத் துறை உதவிப் பேராசிரியர்

# மலர்முகம்

சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரியின் மாணவத்தளிர்களின் எண்ணங்களால் வடிக்கப்பட்ட ஓவியமே இம்மலர்.

மாணவர்களின் கற்பனை, நடைமுறைவாழ்க்கை, பாதித்தபாத்திப்புகள், அனுபவவெளிப்பாடுகள், கண்டகனவுகள், பார்த்த காட்சிகள் இவற்றின் சங்கமமாய் வெளிப்பட்டிருக்கிறது இம்மலர்.

கவிதைகளாய், சிறுகதைகளாய், சிந்தனைத்துளிகளாய், நகைச்சுவைகளாய், ஓவியங்களாய் மலர்ந்திருக்கிறது இம்மலர். மாணவர்களைப்போன்றே ஆசிரியர்களும் தங்கள் எண்ணங்களைப் படைத்திருக்கிறார்கள்.

எந்தவொருபடைப்பும் சமூகத்திலிருந்து எழும்போது அது உயிரோட்டம் மிக்கதாய் இருக்கும். அவ்வாறே இம்மலரும் உணிரோட்டம் பெற்றுள்ளது எனலாம்.

காலந்தோறும் எத்தனை வளர்ச்சிகள் ஏற்பட்டாலும் அவற்றை மிஞ்சி நிற்பது மனிதனின் உயிரோட்ட மானபடைப்பாற்றல். புதிதாக ஒன்று படைக்கப்படும் போது அது புத்துயிருடன் உள்ளது. அவ்வாறே இம்மலரில் வெளிப்பட்டுள்ள படைப்புகள் எல்லாமே புத்துயிருடன் புது சிந்தனைகளுடன் உலாவரும் என நம்பலாம். படைப்பாளர்களின் படைப்புச் சுதந்திரத்தில் எந்தவிதத் தலையீடும் இல்லாமல் படைப்பாளியின் கருத்திற்கு மதிப்பளிக்கப்பட்டிருக்கிறது.

இம்மலர் புதுமலராய் மிளிர உழைத்த அனைவரையும் நன்றியோடு நினைக்கிறோம். கல்லூரி முதல்வர், அனைத்துத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவப்படைப்பாளர்கள், ஆசிரியரல்லாப்பணியாளர்கள், அச்சாக்கம் செய்தோர் அனைவருக்கும் நன்றிப்பா இசைக்கிறது மலர்க்குழு.

# உள்ளே


1. ஆண்டறிக்கை
2. பட்டமேற்பு விழாப்பேருரை
3. நல்வரவு ஆகுக
4. நட்பு
5. பெண்
6. என் இனிய தமிழே
7. பேயால் மனிதருக்கு...
8. வாழ்க்கை
9. அம்மா
10. என் இனிய தனிமையே
11. சிறகைவிரி வானம் நோக்கி
12. ஆசைகள்
13. பெண்ணின் சுதந்திரம்
14. ஆதரவற்ற தங்கையின் அழுகுரல்
15. சமூகத்தில் நமது பண்பாடு
16. உதிரிப்பூக்கள்
17. அப்பா
18. மின்சாரக் கம்பிகள்
19. விடுகதைகள்
20. இலக்கை எட்டு
21. கவிதை
22. நகைச்சுவை
23. பணம்
24. பொது அறிவு
25. என் வீட்டுச் செல்லப்பிள்ளை
26. செயற்கையாக இயற்கை
27. பொன் மொழிகள்
28. புன்னகை
29. Life
30. Trust
31. மதிப்பெண்
32. பயணம்
33. இராணுவ வீரனும் மகளும்
34. கல்லூரிக் காலம்
35. கல்வி
36. பற
37. ஆச்சரியமே
38. இயற்கை
39. பசியாற்றுவித்தல்..
40. விவசாயி
41. தாய்
42. ரோஜா
43. கல்வி
44. ஆகாயம் உன் அருகில்
45. நேர்மை
46. வானமும் உயரமும்
47. அலைபேசி
48. உழைப்பே உயர்வு தரும்
49. பாரதியும் பாரதமும்
50. விவசாயத்தின் இன்றியமையாமை..
51. The Most Powerfull weapon
52. Swachi Bharat Abhiyan
53. Success in Life
54. Wings of Knowledge
55. The Journey of a Girl
56. ஓவிய(ர்)ப் பக்கங்கள்



கல்லூரி முதல்வர்



கல்லூரி ஆட்சிக் குழுவினர்




07.03.2023 அன்று நடைபெற்ற யோகா பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் திருப்பூர் மாவட்ட காவல் ஆணையர் திரு. பிரவீன்குமார் அபிநபு IPS



03.03.2023 அன்று நாட்டு நலப்பணித்திட்டம் அலகு 2-ன் சார்பாக நடைபெற்ற வனவிலங்கு பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வில் திருப்பூர் மாவட்ட வனச்சரக அலுவலர் திரு. M. சுரேஷ் கிருஷ்ணா அவர்கள் பங்கேற்றார்.



நாட்டு நலப்பணித் திட்ட அலகு-3 இன் சார்பாக செம்மாண்டம்பாளையம் ஊராட்சியில் நடத்தப்பட்ட சிறப்பு முகாமில் தூய்மைப்பணியில் ஈடுபட்ட மாணவர்கள்



27-08-2022 அன்று திருப்பூர் மாநகர மேயர் திரு. ந.தினேஷ்குமார் மற்றும் ஆணையர் திரு. கிராந்திகுமார் பாடி ஆகியோரிடம் தன்னலமற்ற சேவைக்காக விருது பெற்ற நாட்டு நலப்பணித் திட்ட அலகு-2 மாணவர்கள்




16-09-2022 அன்று தேசிய மாணவர் படையும், திருப்பூர் மாநகர காவல் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவும் இணைந்து நடத்திய போதைப் பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம்




03-01-2023 அன்று இளைஞர் செஞ்சிலுவை சங்கத்தின் சார்பாக நடைபெற்ற ஒரு நாள் முகாமில் சிறப்பு விருந்தினரின் சிறப்புரை

# UNIVERSITY RANK HOLDERS



R.DIVYA
UNIVERSITY I RANK
PG CHEMISTRY



S.VANISRI
UNIVERSITY I RANK
PG COSTUME DESIGN AND FASHION



S.PRABHAKARAN
UNIVERSITY I RANK
UG INTERNATIONAL BUSINESS



D.PANDISELVI
UNIVERSITY III RANK
UG HISTORY



R.LINCY EVANGLINE
UNIVERSITY III RANK
PG INTERNATIONAL BUSINESS



R.AKILPRASATH
UNIVERSITY IV RANK
UG HISTORY



C.NAGAKARTHIKA
UNIVERSITY IV RANK
PG CHEMISTRY



B.SUBASH
UNIVERSITY V RANK
PG INTERNATIONAL BUSINESS



S.HARIKRISHNAN
UNIVERSITY V RANK
PG CHEMISTRY



A.MANOJ
UNIVERSITY VI RANK
PG ENGLISH



C.BADMASHRI
UNIVERSITY VI RANK
PG ZOOLOGY



G.VANILAN
UNIVERSITY VI RANK
PG CHEMISTRY



K.PRAVEENKUMAR
UNIVERSITY VI RANK
UG INTERNATIONAL BUSINESS



M.GOPINATH
UNIVERSITY VI RANK
UG HISTORY



M.MONISHA
UNIVERSITY VI RANK
PG PHYSICS



A.SIVASAKTHI
UNIVERSITY VII RANK
PG CHEMISTRY



R.KAVIPRIYA
UNIVERSITY VIII RANK
PG CHEMISTRY




M.PREMKUMAR
UNIVERSITY IX RANK
PG INTERNATIONAL BUSINESS



R.ARULKUMAR
UNIVERSITY X RANK
UG HISTORY

# SPORTS & NCC ACHIEVERS



**SUO B. PRAVEEN ,** III-BSC CHEMISTRY,
SPECIAL NATIONAL INTEGRATION CAMP,
JAMMU AND KASHMIR, SNIC -2022



**CUO B. PRAKASH,** III-BSC. CS,
ARMY ATTACHMENT CAMP, 35 FIELD
ARTILLERY REGIMENT, AAC-2023



**CUO D.DHANUSRI,**
III-BA. TAMIL, THAL SANIC CAMP,
NEW DELHI, TSC -2022



**SGT P. VASANTH,**
III-BSC. CHEMISTRY,
REPUBLIC DAY CAMP,
NEW DELHI, RDC -2023



**CPL S. MIRDHULA,**
III-BA. ECONOMICS,
ROCK CLIMBING TRAINING CAMP,
GWALIOR, RCTC -2021



**L/CPL R. ANITHA,**
II-B. COM (CA), BASIC LEADERSHIP
CAMP, THIRUMALAYAM PALAYAM,
BLC -2022



**K . JEGATHRATCHAGAN**
II.B.A.TAMIL
BOXING All India Inter University



**S . DINESHKUMAR**
III.B.COM.CA - BODYBUILDING
ALL INDIA INTER UNIVERSITY



**A . AKASH**
I.BCA HOCKEY SOUTH
ZONE INTER UNIVERSITY



**S . MALARAVAN**
II.B.COM HOCKEY
SOUTH ZONE INTER UNIVERSITY



**S .SURIYAPRAKASH**
II.B.A.HISTORY - II PLACE HOCKEY
SOUTH ZONE INTER UNIVERSITY



**V . SELVAKUMAR**
I.M.SC.PHYSICS - HOCKEY
SOUTH ZONE INTER UNIVERSITY



**T . SINGAPRAKASH**
I.B.Com., SELECTED FORUNDER 18
TAMILNADU HOCKEY TEAM

# தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் பங்கேற்ற நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்கள்



S. Boopathi Raja, NSS UNIT - II,
Second B.Sc Chemistry,
National Integration Camp,Maharashtra,
24.02.2023 to 04.02.2023



C. Sukil Anand, NSS UNIT - II,
B.Sc Chemistry,
State Level National Adventure Camp,Tamilnadu,
13.07.2022 to 16.07.2022



K.Sowmiya, NSS - II,
First B.Sc Zoology,
National Integration Camp,Maharashtra State,
24.02.2023 to 04.02.2023



L. Vanaparvathi, NSS UNIT - II,
Third B.Sc Zoology,
National Adventure Camp, Himachal Pradesh,
06.11.2022 to 15.11.2022



M. Vijay, NSS UNIT - II,
Second B.A History,
National Youth Festival Camp 2023, Karnataka,
12.01.2023 to 16.01.2023



R. Rathinaganesh, NSS UNIT - II,
B.Sc Chemistry,
State Level National Adventure Camp, Tamilnadu,
13.07.2022 to 16.07.2022



R.Ramesh, Nss UNIT- II,
Third B.A Economics,
National youth festival 2023, Karnataka,
12.01.2023 to 16.01.2023




S. Aravindhan, NSS UNIT - II,
Third B.Sc Zoology,
State Republic Day Parade Camp, Tamilnadu,
17.01.2023 to 26.01.2023



P. Pakiyalakshmi, NSS UNIT - II,
Third B.Sc Zoology,
National Integration Camp,Maharashtra,
24.02.2023 to 04.02.2023





27.02.2023 அன்று நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளி மாணவர்கள் கல்லூரியைப் பார்வையிட்ட நிகழ்வு.





20.01.2023 அன்று காணொளி காட்சி மூலம் தமிழக முதல்வர் அவர்களால் ரூ.1.86 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட வகுப்பறை கட்டிடத் திறப்பு விழாவில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. க.செல்வராஜ் அவர்கள்





திருப்பூர் மாவட்ட கபாடிக் கழகம் சார்பில் குமரன் அரங்கிற்கு ரூ.1 லட்சம் மதிப்பில் இருக்கைகள் வழங்கிய நிகழ்வில் திரு. சக்தி சுப்பிரமணியம், திரு.ஜெயசித்ரா A. சண்முகம் முதலானோர்.



'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் HCL நிறுவனத்தின் வேலை வாய்ப்பு வழிகாட்டல் நிகழ்வில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் (பயிற்சி) செல்வி. பல்லவி வர்மா அவர்களன் சிறப்புரை



பொது கணினி ஆய்வகத்திற்காக (Common Computing Lab) உடுமலை அரசு கலைக்கல்லூரி முன்னாள் மாணவர் சங்க அறக்கட்டளை சார்பில் செயலாளர் ஆடிட்டர் திரு. CA. R. கந்தசாமி அவர்கள் நாற்காலிகள் வழங்கிய நிகழ்வு



யோகா பயிற்சி நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினர் திருப்பூர் மாவட்ட காவல் ஆணையாளர் திரு. பிரவின் அபிநபு, திரு.மெஜஸ்டிக் கந்தசாமி முதலானோர்.



21.02.2023 அன்று நடைபெற்ற உலக தாய்மொழி தின விழாவில் ஊடகவியலாளர் திரு. கா. சு. நாகராஜன் அவர்களின் சிறப்புரை

# ஆண்டறிக்கை
## 2022 - 2023

ANNUAL REPORT

(06.04.2023 அன்று கல்லூரி ஆண்டு விழாவில் முதல்வரால் வாசித்தளிக்கப்பட்டது)

1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரி பொன் விழா ஆண்டைக் கடந்து சிறப்பாகத் தனது சமூகப் பங்களிப்பைச் செய்து வருகிறது. ஆண்டறிக்கை என்பது ஒரு கல்வி நிலையத்தின் ஓராண்டு சாதனையை விளக்கும் காலக் கண்ணாடியாகும். அவ்வகையில் 2022-2023 ஆம் கல்வியாண்டில் எண்ணற்ற சாதனைகளை செய்திருக்கிறது. அவற்றில் சிலவற்றைப் பட்டியலிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

2021-2022 ஆம் கல்வியாண்டின் இறுதியில், பாரதியார் பல்கலைக் கழகத் தேர்வுகளில் இளநிலைப்பட்ட வகுப்புகளில் தேர்ச்சி விழுக்காடு 81.40 % ஆகும். முதுநிலைப்பட்ட வகுப்புகளில் தேர்ச்சி விழுக்காடு 90.03% ஆகும். வரும் கல்வியாண்டில் எம்.பி.ஏ. பட்டப்படிப்பு துவங்குவதற்கு தமிழக அரசு அறிவித்துள்ளது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

பல்கலைக்கழகத் தேர்வு முடிவுகளின் தரவரிசைப்பட்டியலில் இளநிலைப்பட்ட வகுப்புகளில் பன்னாட்டு வணிகவியல் துறையில் எஸ்.பிரபாகரன். முதுநிலைப்பட்ட வகுப்புகளில் வேதியியல் துறையில் ஆர். திவ்யா, ஆடை வடிவமைப்புத் துறையில் எஸ். வாணிஸ்ரீ ஆகிய மூவரும் முதலிடம் பெற்று தங்கப்பதக்கமும். வரலாற்றுத் துறையில் டி.பாண்டி செல்வி 3 ஆம் இடத்தையும். ஆர். அகில் பிரசாத் 4 ஆம் இடத்தையும். எம்.கோபிநாத் 6 ஆம் இடத்தையும். ஆர். அருள்குமார் 10 ஆம் இடத்தையும். பன்னாட்டு வணிகவியல் துறையில் கே.பிரவீன்குமார் 6 ஆம் இடத்தையும். முதுநிலை வகுப்புகளில் வேதியியல்துறையில் சி.நாககார்த்திகா 4ஆம் இடத்தையும், எஸ். ஹரிகிருஷ்ணன் 5 ஆம் இடத்தையும். ஜி. வாணிலன் 6 ஆம் இடத்தையும், ஏ.சிவசக்தி 7 ஆம் இடத்தையும், ஆர்.கவிப்பிரியா 8ஆம் இடத்தையும், இயற்பியல் துறையில் எம்.மோனிசா 6 ஆம் இடத்தையும், விலங்கியல் துறையில் சி.பத்மாஸ்ரீ 6 ஆம் இடத்தையும், ஆங்கிலத்துறையில் ஏ.மனோஜ் 6 ஆம் இடத்தையும் பன்னாட்டு வணிகவியல் துறையில் ஆர்.லிங்சிளவாஞ்சலின் 4ஆம் இடத்தையும், பி.சுபாஷ் 5 ஆம் இடத்தையும். எம். பிரேம்குமார் 9ஆம் டத்தையும் பெற்று கல்லூரிக்கும், தத்தம் துறைகளுக்கும், பெற்றோர்களுக்கும் பெருமை தேடித்தந்துள்ளனர்.

இக்கல்வியாண்டில் பின்தங்கிய மற்றும் மிகவும் பின் தங்கிய பிரிவில் 1266 மாணவர்களுக்கும், 523 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கும், சேர்த்து 69 இலட்சத்து 59 ஆயிரத்து 246 ரூபாய் கல்வி உதவித் தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் வழியிலும் 379 மாணவர்களுக்கு 3 இலட்சத்து 41 ஆயிரத்து நூறு ரூபாய் பெற்று வழங்கப்பட்டுள்ளது. பாரதியார் பல்கலைக்கழகத்தின் காமராசர் அறக்கட்டளை மூலமாக வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை 4 மாணவர்கள் இவ்வாண்டில் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ள கல்லூரி மாணவியருக்கான மூவலூர் இராமாமிருதம் அம்மையார் உயர்கல்வி உதவித் தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 386 மாணவியர் பயனடைந்துள்ளனர். முழுநேர முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் வணிகவியல் துறையில் இருவரும், பன்னாட்டு வணிகவியல் துறையில் நால்வரும் தமிழக அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி உதவித் தொகை தலா ரூ.1,00,000/- பெற்றுள்ளனர்.

தமிழக அரசின் சார்பில் ரூ.1.86 கோடி மதிப்பில் 10 வகுப்பறைகளைக் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டு 20.01.2023 அன்று தமிழக முதல்வர் அவர்களால் காணொலிகாட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இக் கல்வியாண்டில் பொது பராமரிப்புப் பணிகளுக்காக 22 இலட்சம் ஒதுக்கப்பட்டு பொதுப் பணித்துறையால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளிமுகமை மூலம் கல்லூரியில் துப்புரவுப்பணியாளர்கள் இருவரும் தூய்மைப்பணியாளர் ஒருவரும் காவலர்கள் இருவரும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கணினி அறிவு காலத்தின் கட்டாயத் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு கணினி அறிவியல் பாடம் பயிலாத மாணவர்களுக்கு உருவாக்கப்பட்ட கணினி அறிவொளித் திட்டத்தின் கீழ் 613 மாணவ, மாணவியருக்குக் கணினிக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. 01.04.2023 அன்று தேர்வு நடைபெற்றது.

எம் கல்லூரியில் 4 அலகுகளைக் கொண்டு இயங்கி வரும் நாட்டு நலப்பணித்திட்டம் தமிழக அளவில் மிகச் சிறப்பாக இயங்கி கல்லூரிக்குப் பெருமையைப் பெற்று தந்துள்ளது. நம்முடைய மாணவர்கள் தன்னார்வலர்களாக கலந்து கொண்டு அரசோடு சேர்ந்து மக்களுக்கு நோய்த் தொற்று, தடுப்பூசிமுகாம்கள், ஊழல் தடுப்பு, சுற்றுச்சூழல் பேணுதல், சமூக நீதியை நிலைநாட்டுதல் போன்றவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறந்த பங்களிப்பைச் செய்த நிகழ்வு மக்களிடையே பெரும் பரவேற்பைப் பெற்றது. நாட்டு நலப்பணித்திட்ட அலகு 2 ஜுன் 2022 முதல் மார்ச் 2023 வரை 276 நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு 86 மாணவர்கள் 86 யூனிட் இரத்தம் தானம் செய்துள்ளனர். 2 கிராமங்களைத் தத்தெடுத்து சிறப்பு முகாம்களை நடத்தி தூய்மைப்பணி மற்றும் சுகாதார விழிப்புணர்வு ஆகியவற்றை மக்களிடையே ஏற்படுத்தி வருகிறது. அலகு-3, 29.03.2023 முதல் தொடங்கி சிறப்பு முகாமினை செம்மாண்டம்பாளையம் ஊராட்சியில் நடத்தியது. மத்திய அரசின் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம், அலகு - 2 இன் அலுவலர், ஆ.மோகன்குமார் அவர்களை முதன்மைப் பயிற்சியாளராக நியமித்து அதற்கான பயிற்சியை புதுதில்லியில் 14.03.2023 முதல் 16.03.2023 வரை வழங்கியது. 28.03.2023 அன்று திருச்சியில் நடைபெற்ற நான் முதல்வன் திட்டத்தின் கீழ் நடைபெற்ற நாட்டு நலப்பணித்திட்ட புத்தாக்கப்பயிற்சியில் எம் கல்லூரி அலகு 1 மற்றும் அலகு 4 இன் திட்ட அலுவலர்கள் திரு. வ.செந்தில்குமார், முனைவர் சா.பர்வீன் பானு ஆகியோர் பங்கு பெற்றனர்.

இந்தக் கல்வியாண்டில் அரசு மற்றும் பல்வேறு அமைப்புகளின் சார்பாக அலகு 2 ஆறு விருதுகளைப் பெற்றுள்ளது. 26.01.2023 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில குடியரசு தின விழா அணி வகுப்பில் விலங்கியல் துறை மாணவர் எஸ்.அரவிந்தன் பங்கேற்றார். இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு முகாம்களில் தமிழக அணி சார்பாக கணிதத்துறை மாணவர் எஸ்.சுந்தரம், விலங்கியல்துறை மாணவியர் கே.சௌமியா, பி.பாக்கியலட்சுமி, வேதியியல்துறை மாணவர் எஸ்.பூபதிராஜா, தமிழ்த்துறை மாணவர் ஏ.காமராஜ், வரலாற்றுத்துறை மாணவர் எம்.சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு கல்லூரிக்குப் பெருமையைத் தேடித் தந்துள்ளனர். 31.05.2022 அன்ற அலகு 3 இன் சார்பாக பாலின சமத்துவக் கல்விகுறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் மாணவிகளுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

எமது கல்லூரியின் தேசிய மாணவர் தேசிய மாணவர் படை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 15.06.2022 முதல் 26.06.2022 வரை தேசிய அளவில் ஸ்ரீ நகரில் நடைபெற்ற சிறப்பு தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் மூன்றாமாண்டு வேதியில் மாணவர் பி.பிரவீன் கலந்து கொண்டு சிறப்பித்தார். 14.09.2022 முதல் 25.09.2022 வரை புதுதில்லியில் நடைபெற்ற சானிக் முகாமில் மூன்றாமாண்டு தமிழ் இலக்கிய மாணவி டி.தனுஸ்ரீ கலந்து கொண்டார். இவ்வாண்டு புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பு முகாமில் மூன்றாமாண்டு வேதியியல் மாணவர் பி.வசந்த் பங்கேற்றுச் சிறப்பித்தார். 17.01.2023 முதல் 28.01.2023 வரை கோயம்புத்தூர் மதுக்கரையில் இந்திய இராணுவத்துடன் இணைந்து நடத்தப்பட்ட முகாமில் மூன்றாமாண்டு கணினி அறிவியல் மாணவர் பி.பிரகாஷ் கலந்து கொண்டார்.

எம் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் சார்பில் 03.03.2022 அன்று ஒரு நாள் நடைபெற்ற உடல் நலம் மற்றும் தீ தடுப்புப் பயிற்சி என்ற தலைப்பில் நடைபெற்ற விழாவில் மருத்துவர் பா.இராம்குமார், மருத்துவர் வி.உமா மகேஸ்வரி, தீ தடுப்பு பயிற்சியாளர் திரு. எம்.இராபர்ட் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கல்லூரியின் பொதுநூலகத்தில் பொதுநூல்கள், பாடம்சார் இதழ்கள், நாளேடுகள், வார மற்றும் மாத இதழ்கள், வேலைவாய்ப்புச் செய்திகள் மற்றும் உயர்கல்விச் செய்திகள் அடங்கிய குறிப்பேடுகளும், கையேடுகளும், வெளியீடுகளும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. நூலகம் கணினி மயமாக்கப்பட்டு மின் தகவல் பரிமாற்றம் மூலம் மாணவர்களுக்கு சேவை வழங்குகிறது.

இந்தக் கல்வியாண்டில் நூலக சேவைகளை மாணவர்கள் எளிதில் பெறும்வகையில் மொபைல் ஆன்ட்ராய்டு செயலி அமைக்கப்பட்டு டிஜிட்டல் நூலகம் செயல்பட்டுவருகிறது. மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வாசகர் வட்டம் செயல்பட்டு, சிறந்த வாசிப்பாளரைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஆண்டும் பரிசுகளை வழங்கி வருகிறது. மேலும் பல்வேறு வலைத்தள கருத்தரங்குகளை நடத்தி மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

எம் கல்லூரியின் வாக்காளர் விழிப்புணர்வு மன்றத்தின் சார்பாக 02.06.2022 அன்று இணையவழி மூலமாக கல்லூரி மாணவ மாணவிகளுக்கு வாக்களிக்கும் செயல்முறை விளக்கம் நடத்தப்பட்டது. 08.10.2022 அன்று இம் மன்றத்தின் சார்பாக நடைபெற்ற சுவரொட்டி வரையும் / எழுதும் போட்டியில் 40க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். 29.11.2022 அன்று 18 வயது பூர்த்தியான மாணவ, மாணவியருக்கான வாக்காளர் அடையாள அட்டை பெறுவதற்கான முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில் 360 மாணாக்கர்கள் பங்கு பெற்றுப் பயனடைந்தனர்.

கல்லூரியின் அகப்புகார்க் குழு சார்பில் (Internal Complaint Committee) மாணவியருக்கான விழிப்புணர்வு முகாம் பத்து நாட்கள் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது. கல்லூரியின் அகப்புகார்க் குழு மற்றும் மகளிர் மன்றம் சார்பில் 08.03.2023 அன்று சர்வதேச மகளிர் தினவிழா கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் அனைத்திந்திய ஜனநாயக பெண்கள் அமைப்பின் திருப்பூர் மாவட்ட துணைத் தலைவர் திருமதி. ஆர். மைதிலி அவர்களும் வழக்கறிஞர் திருமதி. சிவசங்கரி அவர்களும், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

வேலைவாய்ப்பு மற்றும் வழிகாட்டி மையம் கல்லூரியில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஜூன் மற்றும் ஜுலை 2022 மாதங்களில் தமிழ்நாட்டுத் திறன் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக எம் கல்லூரி மாணவ, மாணவியருக்குப் பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிய பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. ஆகஸ்ட் 2022 முதல் அக்டோர் 2022 வரை திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்புத்துறை சார்பாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. மேலும், டிசம்பர் 2022 மார்ச் 2023 ஆகிய மாதங்களில் வேலைவாய்ப்புப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அனைத்து இளநிலை முதலாமாண்டு மாணவர்களுக்கு Cambridge Course மூலம் ஆங்கிலப் பயிற்சியும், இரண்டாமாண்டு மாணவர்களுக்கு Microsoft Essential பயிற்சியும், மூன்றாமாண்டு மாணவர்களுக்குப் பாடப் பிரிவுகளுக்குத் தகுந்தாற் போல் Machine Learning, Google Sales Force, NSE Academy மற்றும் IBM Skills Build ஆகிய பயிற்சிகளும் மேற்காண் நிறுவனங்களாலும், எம் பேராசிரியர்களாலும் நடத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

எம் கல்லூரியின் உடற்கல்வித்துறை சார்பாக பல்கலைக்கழக, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் மாணவ, மாணவியர் கலந்து கொண்டு பல்வேறு பரிசுகளைப் பெற்று, கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்துள்ளனர். பாரதியார் பல்கலைக்கழக அளவிலான குத்துச்சண்டைப் போட்டியில் இளங்கலை இரண்டாமாண்டு தமிழ் இலக்கிய மாணவர் என். ஜெகத்ரட்சகன் தங்கப்பதக்கமும், மூன்றாமாண்டு வேதியியல் மாணவர் ஏ. செல்வகுமார் வெள்ளிப்பதக்கமும், ஆணழகன் போட்டியில் மூன்றாமாண்டு

வணிகவியல் துறை மாணவர் எஸ். தினேஷ்குமார் தங்கப்பதக்கமும் பெற்றுள்ளனர். இளநிலை மூன்றாமாண்டு பன்னாட்டு வணிகவியல் மாணவி எஸ்.டி. கலைவாணி மாநில அளவில் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டி 80 கிலோ எடைப் பிரிவில் தங்கப்பதக்கம் பெற்று கல்லூரிக்கு பெருமையைத் தேடித் தந்துள்ளார்.

பாரதியார் பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் எம் கல்லூரி மூன்றாமிடம் பெற்றது. பாரதியார் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையேயான கபடி போட்டியை எம் கல்லூரி சிறப்பாக நடத்தியது. பாரதியார் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையேயான ஹாக்கி போட்டியில் எம் கல்லூரி ஹாக்கி அணி இரண்டாம் இடம் பிடித்தது.

முதலாமாண்டு வணிகவியல்துறை மாணவர் த.சிங்கப்பிரகாஷ் 18 வயதிற்கு உட்பட்டோருக்கான தமிழக ஹாக்கி அணிக்குத் தேர்வு செய்யப்பட்டு தென்மண்டல அளவிலான ஹாக்கி போட்டியில் முதலிடம் பிடித்தார். எம் கல்லூரி முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளில் ஆண்கள் பிரிவில், கிரிக்கெட், கூடைப்பந்து ஆகியவற்றில் முதலிடமும், ஹாக்கி, கால்பந்து ஆகியவற்றில் இரண்டாமிடமும், பெண்கள் பிரிவில் ஹாக்கி, கால்பந்து ஆகியவற்றில் இரண்டாமிடமும் பெற்றுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற அகில இந்திய அளவில் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான குத்துச் சண்டைப் போட்டியில் பாரதியார் பல்கலைக்கழக அணிக்காக இளங்கலை இரண்டாமாண்டு தமிழ் இலக்கியமாணவர் என். ஜெகத்ரட்சகன் கலந்து கொண்டார். இளநிலை இரண்டாமாண்டு வணிகவில் மாணவர் எஸ். மலரவன், முதுநிலை முதலாமாண்டு இயற்பியல் மாணவர் செல்வக்குமார், முதுகலை முதலாமாண்டு இயற்பியல் மாணவர் செல்வக்குமார், முதுகலை முதலாமாண்டு தமிழ் இலக்கிய மாணவர் ரெ.அஸ்வின், இளங்கலை இரண்டாமாண்டு வரலாற்று மாணவர் சூர்ய பிரகாஷ், இளங்கலை முதலாமாண்டு வரலாற்று மாணவர் ஆகாஷ் ஆகியோர் பாரதியார் பல்கலைக்கழக ஹாக்கி அணிக்குத் தேர்வாகி கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற தென்மாநில அளவிலான ஹாக்கிப் போட்டியில் கலந்து கொண்டனர்.

எம் கல்லூரியும் திருப்பூர், சாமுண்டிபுரம் அறிவுத் திருக்கோயில் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையுடன் இணைந்து ஆண்டுதோறும் நடத்தும் இளநிலை இரண்டாமாண்டு மாணவ, மாணவியருக்கான யோகா பயிற்சியில் 730 மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு 07.03.2023 அன்று நடைபெற்ற விழாவில் திருப்பூர் மாநகர காவல் ஆணையர் திரு. பிரவீன்குமார் இ.கா.ப. அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

இக் கல்வியாண்டில் நுண்கலைமன்றம் சிறப்பாகச் செயல்பட்டு மாணவர்களை ஊக்குவித்து பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்துள்ளது. 02.08.20222 முதல் 04.08.2022 வரை நடைபெற்ற 75 ஆவது சுதந்திர தின அமுதப் பெரு விழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. 14.11.2022 அன்று ஜவஹர்லால் நேரு பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சித்துறை சார்பாக நடைபெற்ற திருப்பூர் மாவட்ட கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் இளநிலை முதலாமாண்டு வணிகவியல் மாணவர் ச.நாகராஜ் முதற்பரிசாக ரூபாய் 5,000-க்கான காசோலை மற்றும் பாராட்டு

சான்றிதழும் பெற்றுள்ளார். 27.11.2022 அன்று கோவை மண்டல அளவிலான அம்பேத்கார் பற்றிய பேச்சுப் போட்டியில் இளநிலை மூன்றாமாண்டு வேதியியல் மாணவி சா.பிருந்தா மூன்றாம் பரிசு பெற்றுள்ளார்.

03.03.2023 அன்று சேலத்தில் வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறிகள் எனும் தலைப்பில் நடைபெற்ற மாநில அளவிலான பேச்சுப்போட்டியில் இளநிலை முதலாமாண்டு வணிகவியல் மாணவர் ச.நாகராஜ் கலந்து கொண்டு இரண்டாமிடம் பெற்று ரூபாய் 5.000-க்கான காசோலை மற்றும் கேடயமும் பெற்றுள்ளார். 15.03.2023 அன்று திருப்பூர் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பாக பல்லுயிர் பாதுகாப்பும் மனித வாழ்வும் எனும் தலைப்பில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் இளநிலை இரண்டாமாண்டு இயற்பியல் மாணவி சி. சங்கீதா முதலாமிடத்தையும். இளநிலை முதலாமாண்டு வேதியியல் மாணவி இ. இளங்காவியா இரண்டாமிடத்தையும், முதுநிலை முதலாமாண்டு இயற்பியல் மாணவி ஆ.சந்தியா மூன்றாமிடத்தையும் பெற்றனர். 27.03.2023 அன்று மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் இளநிலை மூன்றாமாண்டு வேதியியல் மாணவி சா.பிருந்தா மூன்றாம் பரிசாக ரூபாய் 5.000 பெற்றுள்ளார். மேலும், அரசு மற்றும் அரசுசாரா அமைப்புகள் நடத்தும் பல்வேறு போட்டிகளில் எம் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு பாராட்டும் பரிசும் பெற்றுவந்துள்ளனர்.

இயற்பியல்துறை உதவிப் பேராசிரியர் வெ.ஆ.விஜயகீதா பாரதியார் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். ஆங்கிலத்துறையில் முனைவர் க.பிருந்தா வழிகாட்டலில் இருவரும், முனைவர் லா.ரூபிகிறஸ்டி வழிகாட்டலில் ஒருவரும், முனைவர். சா.பர்வீன்பானு வழிகாட்டலில் இருவரும், முனைவர். ஆ.முருகேசன் வழிகாட்டலில் ஒருவரும், இயற்பியல் துறையில் முனைவர் ஹரேஷ் ம.பாண்டியா வழிகாட்டலில் ஒருவரும், முனைவர். இரா.பாலன் வழிகாட்டலில் ஒருவரும், வேதியியல்துறையில் முனைவர் சு.ப.ராஜாசிங் வழிகாட்டலில் ஒருவரும், கணினி அறிவியல்துறையில் முனைவர் இரா. சங்கர் வழிகாட்டலில் இருவரும், முனைவர் மோ.கோபி வழிகாட்டலில் ஒருவரும், முனைவர். அ.குமார் கொம்பையா வழிகாட்டலில் இருவரும். முனைவர் சு. துரைசாமி வழிகாட்டலில் நால்வரும், முனைவர் கி.நந்தினி வழிகாட்டலில் இருவரும், வணிகவியல் துறையில் முனைவர். கோ. இரவீந்திரன் வழிகாட்டலில் ஒருவரும், முனைவர் பா.இராஜசேகரன் வழிகாட்டலில் ஒருவரும், முனைவர். பா.கனகராஜ் வழிகாட்டலில் ஒருவரும், முனைவர் ச.டேவிட் சௌந்தர்ராஜன் வழிகாட்டலில் ஒருவரும், வணிக நிருவாகவியல் துறையில் முனைவர். ஆ.ஜெலின்ஸ் தினகர் வழிகாட்டலில் ஒருவரும், முனைவர். ரெ.சக்திவேல் வழிகாட்டலில் ஒரு வரும் என மொத்தம் 26 பேர் கோவை பாரதியார் பல்கலைக்கழகம் வழியாக முனைவர் பட்டங்களைப் பெற்றுள்ளனர். இ ய ற் பி ய ல் துறையில் முனைவர். க.பா.ராஜேஷ் அவர்கள் DST SERB மூலமாக பெரு ஆய்வுத் திட்டப் (Major Project) பணிக்கு ரூ.25.18.000/- பெற்று ஆய்வு செய்து வருகிறார். தமிழ் மன்றத்தின் சார்பாக 21.02.2023 அன்று உலக தாய்மொழி நாள் விழா சிறப்பாகக் கொண்டாப்பட்டது. கல்லூரியின் 49-ஆவது பட்டமேற்பு விழா 03.10.2022 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் மேனாள் காவல்துறை இயக்குநர் முனைவர் மு.இரவி இ.கா.ப. அவர்கள் சிறப்பு விருந்தினராகக்

கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றி 2019-20 ஆம் கல்வியாண்டில் பட்டம் பெறுவதற்குத் தகுதியுடைய 588 மாணவ மாணவியருக்கு பட்டச் சான்றிதழ்கள் மற்றும் பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவியருக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

கல்லூரியின் 50ஆவது பட்டமேற்பு விழா 04.10.2022 அன்று நடைபெற்றது. இவ் விழாவில் பொதுப் பள்ளிக்கான மாநிலமேடையின் பொதுச் செயலாளர் கல்வியாளர் திரு. பு.பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். 2020 - 2021 - ஆம் கல்வியாண்டில் பட்டம் பெறுவதற்குத் தகுதியுடைய 699 மாணவ மாணவியருக்கு பட்டச் சான்றிதழ்கள் மற்றும் பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவியருக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

இக்கல்வியாண்டில் வணிகவியல்துறைப் பேராசிரியர் முனைவர் கு.புஷ்பலதா தாராபுரத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட அரசு கலை அறிவியல் கல்லூரிக்குப் பொறுப்பு முதல்வராக 23.06.2022 அன்று மாற்றுப் பணியில் சென்றுள்ளார். வேதியியல்துறையில் முனைவர் ந.திலகவதி. கணினி அறிவியல்துறையில் முனைவர் க.சரோஜினி. இயற்பியல்துறையில் முனைவர் சா.அரவிந்தன் ஆகியோர் பணிமாறுதல் பெற்று எம் கல்லூரிக்கு வந்துள்ளனர். இக்கல்லூரியில் அலுவலகக் கண்காணிப்பாளராக பணியாற்றிய திருமதி. செ.கல்பனா நிதியாளராகப் பதவி உயர்வு பெற்று திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. அரசு கலைக்கல்லூரிக்குப் பணிமாறுதல் பெற்றுச் சென்றுள்ளார்.

இக் கல்லூரியில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றிய திருமதி.பா.அந்தோனிராணி கண்காணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று பல்லடம் அரசு கலை அறிவியல் கல்லூரிக்குச் சென்று பணிமாறுதல் பெற்று மீண்டும் இக் கல்லூரிக்கு மாறுதல் பெற்று வந்துள்ளார். கல்லூரியின் நிதியாளர் திரு. இரா.ஜெயராமன் கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் உதவி இயக்குநராகப் பணியிட மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். திரு.பெ.பாஸ்கர். இளநிலை உதவியாளராகத் தமிழக அரசால் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற்று இக் கல்வியாண்டில் பணியில் சேர்ந்துள்ளார். தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்ட 19 கௌரவ விரிவுரையாளர்கள் இக் கல்லூரியில் புதிதாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இக் கல்வியாண்டில் ஆங்கிலத்துறையில் பேரா.ரா.வளர்மதி. தமிழ்த்துறையில் முனைவர் இரா.இந்திராணி. வணிகவியல்துறையில் முனைவர் பா.இராஜசேகரன். முனைவர் மு.கோப்பணசாமி ஆகியோர் பணிநிறைவு பெறுகின்றனர். இவர்கள் பணியாற்றிய காலம் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்தது.

எம் பேராசிரியர்கள் கற்பித்தல்பணி மட்டுமன்றி தேசிய மற்றும் பன்னாட்டு ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு பல்வேறு பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டக்குழுவில் இடம்பெற்றதும். அரசு சார்ந்த பல்வேறு குழுக்களில் இடம் பெற்றும். மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டும் பல்வேறு சமூகப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு நாட்டிற்குச் சிறந்த பங்களிப்பைச் செய்து வருகின்றனர் என்று கூறுவதில் நான் பெருமை கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்.

# 50 ஆவது பட்டமேற்பு விழாப் பேருரை

(04.11.2022 வெள்ளிக்கிழமை)

**பு.பா. பிரின்ஸ் கஜேந்திரபாபு,** கல்வியாளர்

பெருமதிப்பிற்குரிய கல்லூரி முதல்வர் அவர்களே ! பேராசிரியர் பெருமக்களே ! கல்லூரி பணியாளர்களே !

இந்தியாவின் நம்பிக்கையாக விளங்கக் கூடிய இன்றைய தினத்தின் கதாநாயகர்களான பட்டமேற்கவுள்ள மாணவர்களே ! பெரியோர்களே, நண்பர்களே ! இனிய காலை வணக்கம்.

அற்புதமான முதல்வர், அருமையான ஆசிரியர் பெருமக்கள், ஒழுக்கத்தின் முன்னுதாரணமாக திகழும் மாணவர்கள் இதுவே சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியின் அடையாளங்கள். இதற்கு நிகர் எந்தத் தரச்சான்றும், தரப்பட்டியலும் கிடையாது. மாணவர்கள் எதிர்காலம் நன்றாக அமையவேண்டும். நமது கல்லூரி மாணவர்கள் உலக மக்களின் மேம்பாட்டிற்கு பல்துறையிலும் தங்களின் பங்களிப்பை வழங்கிட வேண்டும் என்ற பெரும் ஆர்வம் கொண்டு உழைப்பவர் தான் இக்கல்லூரியின் முதல்வர்.

அவர்தான் இக்கல்லூரியின் ஒளிவிளக்கு. மாணவர்கள் மீது அளவு கடந்த அன்பு கொண்டு, மாணவர்கள் முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறைக் கொண்டு பணியாற்றும் சிறப்பு மிக்க ஆசிரியர்கள் தான் இக்கல்லூரியின் மிகப் பெரிய சொத்து. ஆசிரியர் அல்லாத ஊழியர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையே இக்கல்லூரியின் செல்வம்.

நாங்கள் எல்லோருக்குமானவர்கள். அன்பு செலுத்தமட்டுமே எங்களுக்கு தெரியும். நாங்கள் யாருக்கும் பகைவர் இல்லை. எங்களுக்கு யாரும் பகைவர் இல்லை என்ற பெருமிதத்துடன் இந்தியத்தாயின்மடியில், தமிழ்த்தாயின் பிள்ளைகளாக, உழைக்கின்ற வர்க்கத்தின் உன்னத வாரிசுகளாக விளங்கும் சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி மாணவர்கள் தான் இக்கல்லூரியின் அஸ்திவாரம். எதிர்கால இந்தியாவின் நம்பிக்கை.

ஐம்பதாவது பட்ட மேற்பு விழா என்பது கல்லூரி வரலாற்றில் ஓர் மைல்கல். ஐம்பதாண்டைக்கடப்பது எளிதல்ல. சிறப்புகள் இல்லாமல் சிகரத்தைத் தொட்டுவிட இயலாது. இத்துணைச் சிறப்புகள் கொண்ட கல்லூரியின் ஐம்பதாவது பட்ட மேற்பு விழாவில் பங்கேற்று உரையாற்றுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இத்தகைய அரியவாய்ப்பினை அளித்திட்ட முதல்வர் உள்ளிட்ட உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்றேன்.

பட்டமளிப்பு விழா ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள் நீங்கள் இன்று பெற்றிடும் பட்டம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமம். சமூகத்தில் சிலந்திவலை போல பின்னிக்கிடக்கும் அழுக்குகளை அகற்றிட உங்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ள உரிமமே இந்தப் பட்டம் என்றார்.

அண்ணாவின் அன்றைய உரை இன்றைக்கும் பொருந்தும். பட்டம் பெறும் உங்களுக்கு பெரும் கனவுகள் இருக்கும். உங்களின் எதிர் காலவாழ்க்கை, வாழ்வாதாரத் தேவைகளுக்காக மேற்கொண்டுபடிப்பது, படிப்பிற்கு ஏற்றவேலைதேடுவது, பெரும் ஊதியத்தின் மூலம் உங்கள் வாழ்க்கை முறையை மேம்படுத்திக் கொள்வது போன்ற எண்ணற்ற எதிர்பார்ப்புகள், திட்டங்கள் இருக்கும். இத்தகைய எதிர்பார்ப்புகள் தனி நபர் சார்ந்தது.

தனி மனித மேம்பாடு சார்ந்தது. இத்தகைய வாழ்க்கை குறித்த திட்டம் நுகர்வோராக உருவெடுத்து விட்டவர்களுக்குப் பொருந்தும். சந்தையும் அப்படித்தான் உங்களை எதிர்பார்க்கிறது இன்று உங்கள் முன் உள்ள கேள்வி நான்யார் ? என்பது தான். சந்தை தீர்மானித்துள்ள பண்புகளைக் கொண்ட நுகர்வோரா ? அல்லது சுய சிந்தனை, சுயமரியாதை கொண்ட கண்ணியமிக்க மனிதரா ? இந்தக் கேள்விக்கான விடை தான் நாளைய இந்தியாவைத் தீர்மானிக்கப்போகிறது.

நீங்கள் கடந்து வந்த பாதையைச் சற்று திரும்பிப் பாருங்கள். சமூகப் பின்தங்கல், கல்விப் பின்தங்கல் ஆகியவற்றுக்குள்ளான குடும்பங்களில் இருந்து வந்துள்ளீர்கள். பொருளாதார நெருக்கடியால் தத்தளிக்கும் குடும்பங்களில் இருந்து வந்துள்ளீர்கள். சிலர் இத்தகைய சூழலை சந்திக்காத, சிக்கல் அறியாதவராக இருக்கலாம். அத்தகையவர்களை விதிவிலக்காகத் தான் கருதவேண்டும். பெரும் பகுதி மக்கள் ஏதோ ஒருவகையான ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்களே. அதிலும், பெண்கள் இன்றைய தேதிவரை ஆண்களைச் சார்ந்தே இருக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். பெண்களுக்கான அனைத்து முடிவுகளையும், ஆண்களே மேற்கொள்கின்றனர். பெண்கள் உரிமை மனித உரிமையின் அங்கமாக பார்க்கபடுவதில்லை. பாலினச் சமத்துவத்தை, சமூகச் சமத்துவத்தை ஏற்றுக் கொள்ளாத ஒரு சமூகம் எப்படி வளர்ச்சி பெற்ற, நாகரிகமான சமூகமாகத் தன்னைக் கூறிக் கொள்ள முடியும் ? கல்லூரிக் கல்வி ஒருவரின் சமூகச் சிந்தனையில் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்றால் உண்மையிலேயே கற்றல் செயல்பாடு நிகழ்ந்துள்ளதா ? என்ற கேள்வி எழுகிறது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்" - என்ற திருக்குறளும்

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகியற்றியான்" - என்ற திருக்குறளும்

தொடக்கப்பள்ளியில் மனப்பாட்டுப் பகுதியாக இருந்திருக்கலாம். கல்லூரியின் இதன் பொருள் புரிய வில்லை என்றால் கல்வி அறிவு பெற்றதற்கான அடையாளம் தான் என்ன ? நம்மோடு பள்ளியில் ஒன்றாம் வகுப்பு படித்தவர்களை நினைவு படுத்திப்பாருங்கள். அவர்களில் எத்துணைப்பேர் இடைநிலைப் பள்ளிக்கல்வியை முடித்தார்கள் ? அவ்வாறு முடித்து மேல் நிலைப்பள்ளிக் கல்விக்கு வந்தவர்கள் எத்துணைப்பேர் பட்டப்படிப்பு முடித்து இந்த "பட்டதாரி" என்ற நிலையை அடைய முடிந்தது ?

உங்களுடன் தொடக்கப்பள்ளியில் படித்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் உயர் கல்விக்கு வர இயலவில்லை.

அவர்கள் இடையில் ஏதோ ஒரு நிலையில் விடுபட்டுப் போனார்கள். அதே வேளையில் நீங்கள் உயர் கல்வியில் இன்று பட்டமேற்க உள்ளீர்கள். அப்படி என்றால் நீங்கள் யார் ? கல்லூரியில் படிக்கின்ற, படித்து முடித்தவர்களில் இன்று பட்ட மேற்கின்ற நீங்களெல்லாம் யார் ? உங்களோடு தொடக்கப்பள்ளியில் சேர்ந்து பல்வேறு நிலையில் கல்வியைத் தொடர முடியாமல் போனவர்கள், தலைமுறை தலைமுறையாக் கல்வி முறுக்கப்பட்டு, சமூகத்தில் சமநிலை மறுக்கப்பட்டு, பொருளாதாரத்தில் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டு பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் வாழ்க்கையை நடத்தப் போராடிக் கொண்டிருக்கும் கல்வி மறுப்புக்குள்ளான அனைவரின் பிரதிநிதிகள் தான் இன்று பட்ட மேற்கவுள்ள நீங்கள். நீங்கள் தனி மனிதர் அல்ல. இந்தப் பட்டம் உங்களுக்கு மட்டும் உரியது அல்ல.

இப் பட்டம் பெற உங்களுக்கு வாய்ப்பை உருவாக்கித் தந்த உங்கள் தாய், தந்தை தொடங்கி, உடன் பிறந்த சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்கள், ஊர் மக்கள் உள்ளிட்ட மனித சமூகத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்ட அத்துணை மக்களின் பிரதிநிதிகள் தான் இன்றைய பட்டதாரிகள்.

அவ்வாறே அடுத்தடுத்த ஆண்டுகளில் பட்டம் பெற இருக்கும் இன்றைய கல்லூரி மாணவர்களும் வாய்ப்பு மறுக்கப்பட்ட அனைத்து மக்களின் பிரதிநிதிதான். உழைக்கின்ற வர்க்கத்தின் பிரதிநிதிகளாக இந்தப்பட்ட மேற்பு அவையில் அமர்ந்துள்ளீர்கள்.

சமூகத்தின் பிரதிநிதியாக பட்டமேற்கும் நமது பொறுப்பு எவ்வளவு பெரியது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

தலைமைப் பாத்திரம் ஏற்பதற்குரிய தகுதி பெற்ற மனிதர்களாக சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி உங்களை உருவாக்கி மனிதச் சமூகத்திற்கு தந்துள்ளது.

இன்று பட்டமேற்கவுள்ள உங்களை இனி, யாரும் சாதி, சமயம் என்ற குறுகியவட்டங் களுக்குள் அடைத்துவிட முடியாது. மூட நம்பிக்கைகள், சமூகப்பிரிவினைகள், பாலினப்பாகுபாடுகள் போன்ற அனைத்திலிருந்தும் விடுதலை பெற்ற முழுமையாக சுதந்திர மனிதர்களாக பட்டமேற்று, நான் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி மாணவர் என்ற ஒற்றை அடையாளத்தோடு, உலகை மாற்ற, உலகில் உள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியை மட்டுமே நிலைக்கச் செய்திட, உங்களால் இயன்ற அனைத்தையும் செய்யும் சாதியற்ற, சமயமற்ற முழுமனிதர்களாக சமூகத்திற்குள் கால்வைக்கிறீர்கள்.

நேற்றுவரை இருந்த நீங்கள் வேறு ! இன்று பட்டமேற்றுள்ள நீங்கள் வேறு ! இன்று நீங்கள் ஏற்றிருக்கும் பொறுப்பு மிகப் பெரியது. நாமெல்லாம் இத்தகைய பட்டங்களையும், பாராட்டுகளையும் பெற வேண்டும் என்று பாடுபட்ட, பல்வேறு தியாகங்கள் செய்து, நாமெல்லாம் படிப்பதற்கான உரிமையைப் பெற்றுத் தந்த நம்முன்னோர்கள்.

சமூகமாற்றத்திற்கு வித்திட்ட புரட்சியாளர்கள் மகாத்மா ஜோதிராவ் பூலே, அன்னை சாவித்திரிபாய் பூலே, அயோத்திதாசபண்டிதர், அய்யங்காளி, சிந்தனைச்சிற்பி ம.சிங்காரவேலர், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரின் வாரிசுகள் என்ற பெருமையோடு சமூகத்திற்குள் கால் வைக்கப் போகிறீர்கள்.

திருப்பூர் என்றால் கொடிகாத்த குமரன் தான் நினைவுக்கு வருவார். இந்திய விடுதலைக்காக, உரிமைக்குரலெழுப்பி ஊர்வலம் சென்றவர்கள் மீது, பிரிட்டிஷ் இந்திய காவல்துறை கடுமையாகத் தாக்கியபோது, ஒருவர் கீழே விழுகிறார். அவர்கையில் இருந்த மூவர்ணக் கொடி கீழே விழுந்துவிடக்கூடாது என்று திருப்பூர் குமரன் தன்கையில் அக் கொடியைத் தாங்கி இன்னும் வேகமாக விடுதலைக்கான முழக்கத்தை எழுப்புகிறார். காவலர்கள் கொடியை கீழே போடு என்று தாக்குதலைக் கடுமையாக்குகின்றனர்.

உயிர்போனாலும் மூவர்ணக் கொடி விழாது என்று முழக்கமிடுகிறார். திருப்பூர் குமரன் உயிர் பிரிந்தது. கொடி உயிர்த்துடிப்போடு பட்டொளி வீசிப் பறக்கிறது. குமரனின் தியாகம் யாருக்காக ? சாதிக்காகவா ? மதத்திற்காகவா ? இமயம் முதல் குமரி வரை, கட்ச் முதல் காமரூபம்

விரிந்து கிடக்கும் இந்தியாவின் அனைத்து மக்களுக்குமானதே திருப்பூர் குமரனின் தியாகம். நாடுவிடுதலை அடைந்தால் இந்தியர்கள் சாதியிலிருந்து விடுதலை அடைவார்கள், சமயக் கூண்டில் இருந்து விடுதலை அடைவார்கள். சாதியப்பாகுபாடற்ற, சமயபேதமற்ற, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமூகம் கட்டமைக்கப்படும். விடுதலை இந்தியா சமத்துவத்திற்கான இந்தியா. அனைவருக்கும் ஒன்றாக அண்ணன், தங்கை, அக்கா, தம்பி, மாமன், மச்சான் என்று கூடி வாழ வேண்டும் என்ற பெருங்கனவு தான் திருப்பூர் குமரனின் தியாகம். விடுதலை என்பது சமத்துவத்திற்கானது. இன்னொருவரை ஒடுக்குவதோ மற்றவர்களைத் தனக்கு கீழானவர்களாகப் பார்ப்பதோ விடுதலைக்கான பொருள் அல்ல. பரிணாமவளர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் விடுதலைக்கான பொருளை அருட்பிரகாசவள்ளல் இராமலிங்க அடிகளார் நமக்கு விளக்குகிறார்.

வாடியபயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலாரின் உள்ளம் படிப்படியாக உயர்ந்து,

"கலையுரைத்த கற்பனையே நிலை எனக்கொண்டாடும்

கண் மூடிவழக்கம் எலாம் மண்மூடிப்போக..." என்று சிந்திக்கத் தொடங்கியது.

"ஒத்தாரும் உயர்ந்தாரும், தாழ்ந்தாரும் எவரும்

ஒருமையுளர் ஆகிஉலகியல் நடத்தவேண்டும்"

என்ற வேண்டுகோளை முன்வைக்கிறார்.

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே

சாத்திரச்சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே

ஆதியிலேஅபிமானித்தலைகின்ற உலகீர்"என்று உலகமக்களை அறை கூவி அழைத்து,

"அலைந்து அலைந்து வீணேநீர் அழிதல் அழகல்லவே" என்று அறிவுரை வழங்குகின்றார்

"நால்வருணா சிரமம் ஆசாரம் முதலா

நவின்ற கலைச்சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டே"

என்று தெளிவுபடுத்துகிறார். கல்வி, மருத்துவம், வேலை போன்ற மக்களின் வாழ்வாதாரப் போராட்டம் குறித்து கவலைப்படாமல், மக்களை சாதிகளாகவும், மதங்களாகவும் பிரித்து மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் ஆட்சியாளர்களைப் பார்த்து

"கருணைஇலா ஆட்சி கடுகி ஒழிக அருள் வாய்ந்த நன்மார்க்கர் ஆள்க"என்று முழங்குகிறார்.

"சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன் சாத்திரக் குப்பையும் தணந்தேன்"

என்று சாதியையும், மதத்தையும் சாத்திரக்குப்பைகளையும் தவிர்த்ததாக வள்ளலார் பிரகடனப்படுத்துகிறார்.

சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி

என்று, தான் தெளிவுபெற்றதை விளக்குகிறார்.

அருட்பெருஞ்சோதி ! அருட்பெருஞ்சோதி !!

தனிப்பெருங்கருணை ! அருட்பெருஞ்சோதி !! என்ற முழக்கத்தை முன்வைக்கிறார்.

ஜோதி அருளைப் பெருக்குமாம். எப்படி ? ஜோதி என்பது ஒளி. இருட்டை விலக்கக்கூடியது. அறிவு இல்லாதவரை இருட்டில் உள்ளார் என்போம். அறியாமை இருள் அகல கல்வி தேவை. கல்வி நமது அறிவை விசாலப்படுத்தும். உலகில் உள்ள அனைவருக்கும், விபத்தில் சிக்கி இரத்தம் இழந்தால், அவரவர் இரத்தப்பிரிவைக் கண்டறிந்தே இரத்தம் வழங்கிட முடியும். 'ஏ நெகடிவ்' இருப்பவருக்கு 'ஏ பாசிடிவ்' இரத்தம் வழங்கஇயலாது. மருத்துவர் 'ஏ நெகடிவ்' இரத்தம் வேண்டும் என்றுதான் கூறுவார். இரத்தத்துடன் யாரும் சாதிச்சான்று, மதச்சான்று கோரப் போவதில்லை. இந்த உண்மையை அறிவதுதானே கல்வி.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் சாதி, சமய விலங்குகளை உடைத்து மனிதர்களாக நாம் அனைவரையும் ஒருவரை யொருவர் அணைத்துக் கொள்ள மாட்டோமா ? அனைவரையும் ஒன்றென பார்க்கும் விசாலப்பார்வை நமக்குக் கிடைத்து விட்டால் அனைவருக்கும் உதவ வேண்டும் என்ற சிந்தனை நமக்குத் தோன்றாதா? கல்வி அனைவருடனும் அருள் உள்ளத்தோடு நடந்து கொள்ள வழி வகுக்கும். கல்வி நமக்குள் இருக்கும் அறிவைப் பெருக்குகிறது. அதைத்தான் அருளைப் பெருக்கும் ஜோதி என்றார் வள்ளலார். உலகில் உள்ள அனைவருக்கும் நன்மை பயக்கும் செயல்களைச் செய்வதையே தனிப் பெரும் கருணை என்கிறார். வள்ளலாரின் அருட்பெருஞ்சோதி முழக்கம் தான் இந்திய அரசமைப்புச் சட்டம் முன்வைக்கும் சமத்துவக்கோட்பாடு.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் புத்தர் மக்களை ஒன்றுபடுத்தி அனைவருக்கும் அனைத்தும் சமமாக கிடைக்க தன் சிந்தனைகளை முன் வைத்தார். கார்ல் மார்க்சும், ஏங்கல் சும் முன்வைத்த பொதுவுடமைக்கோட்பாட்டிற்கு புத்தரின் சிந்தனையே அடிப்படை என்று அண்ணல் அம்பேத்கர் விளக்கினார்.

புத்தரின் சிந்தனைக்கும் மார்க்ஸ் முன்வைத்த கோட்பாட்டிற்கும் உள்ள ஒற்றுமையை புத்தரும்மார்க்சும் என்ற தனது கட்டுரையில் அண்ணல் அம்பேத்கர் விளக்குகிறார். சமத்துவம் அடைய கல்வி மிகவும் அவசியம். கல்வி அனைவருக்கும் சமமாக கிடைக்க வேண்டும் என்ற

தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சிந்தனைக்கு வடிவம் தந்தவர் தான் கர்மவீரர் காமராசர். பள்ளிகள், கல்லூரிகள், அரசே திறக்கும், நடத்தும் என்று நிதிநெருக்கடி இருந்தகாலத்திலேயே அறிவித்து நடத்திக் காட்டினார் கர்மவீரர் காமராசர். அதன் விளைவு தான் இன்று இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் மாநில அரசு பல்கலைக்கழகங்கள், மாநில அரசு மருத்துவக் கல்லூரிகள் என்ற பெருமையோடு தமிழ் நாடு தலை நிமிர்ந்து நிற்கிறது.

கல்வி தனியாரிடம் முழுமையாக சென்று விட்டால் நம்மில் எத்துணை நபர்களால் உயர்கல்விக்குவர இயலும் ? அரசுக் கல்லூரிகளில் சுயநிதிப்பிரிவுகள் தொடங்கப்பட்டால் நம்மில் எத்துணை நபர்களால் கல்விக் கட்டணம் செலுத்திப்படிக்க முடியும் ? நமக்குக் கிடைத்த கல்வி அடுத்த தலைமுறைக்குக் கிடைக்க வேண்டாமா ? பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் உயர்கல்விக்கான தகுதி இல்லை. தேசிய அளவில் நடக்கும் நுழைவுத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண் தான் பட்டப்படிப்பிற்கான தகுதி. அத்தகைய நுழைவுத் தேர்வு மூலம் தான் பி.ஏ. (தமிழ்), பி.ஏ. (வரலாறு) உள்ளிட்ட எந்தப் பட்டப்படிப்பிலும் சேர முடியும் என்றால் நம்மில் எத்துணைப் பேர் கல்லூரிக்குள் கால் வைக்க இயலும்.

கல்வியின் தரத்தை உயர்த்துகிறேன் என்ற பெயரில் தேர்வுகளைக் கடினமாக்கிக் கொண்டே போகிறீர்கள். தேர்வுகள் கடினமாக கடினமாக இதுவரை உயர்கல்வி வளாகத்திற்குள் கால் வைக்க வாய்ப்பு இல்லாதவர்கள் இனி எப்போதும் கால்வைக்க இயலாத சூழலே ஏற்படும் என்று அண்ணல் அம்பேத்கர் எச்சரித்தார்.

ஜனநாயகம் வலுப்பெற கல்வி அவசியம். கல்வியும், ஜனநாயகமும் அச்சுறுத்தலுக்கு உள்ளானால் விடுதலையும் சமத்துவமும் அர்த்தமற்றதாகிவிடும். நமது அடுத்த தலைமுறையின் கல்விக்காக, நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை முன்வைக்கும், மக்கள் இறுதி இறையாண்மை கொண்ட, சமயச்சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக குடியரசாக இந்தியா தொடர்ந்து நீடித்து வலுப்பெற நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். எத்துணை இடையூறு வந்தாலும் கல்வியையும், ஜனநாயகத்தையும் காப்பது நமது கடமை என்று முன்னிற்கும் இந்தியத் தலைவர்களாக இன்று பட்ட மேற்றுள்ள திருப்பூர் சிக்கண்ணா கல்லூரி வளர்த்தெடுத்துள்ள நீங்கள் அனைவரும் திகழ வேண்டும். அதுவே வ.உ.சி. உள்ளிட்ட விடுதலைப் போராட்டத் தியாகிகள் சிந்திய ரத்தத்திற்கு நாம் செலுத்தும் மெய்யான நன்றிக்கடன்.

மனிதரில் நீயுமோர் மனிதன் : மண்ணன்று !
இமைதிற ! எழுந்து நன்றாய் எண்ணுவாய் !
தோளை உயர்த்துச் சுடர் முகம்தூக்கு !

# நல்வரவு ஆகுக

வாம்மா... நல்லா இருக்கியா?... இன்னைக்கு என்ன விசேஷம் என்றார் முத்து ஐயர்... ஒன்னுமில்ல அண்ணா ஆர்டர் வந்திருச்சு. அதான் சிவலிங்க ஐயாவ பார்த்துட்டு அம்பாளுக்கும் ஒரு அர்ச்சனையை பண்ணிட்டு வேலைக்கு சேர்ந்திடலாம்னு இருக்கிற. அதான் கூட்டம் கம்மியா இருக்கும்னு கோயிலுக்கு வந்தேன். ஆகட்டுமா என்று சொல்லி நகர்ந்தார் முத்து ஐயர். பத்மாவதிக்கு இந்த நாள் பொன்னான நாளாக அமையும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை P.பத்மாவதி B.Com இணை இயக்குநர் பதவிக்கு பணியில் சேர்ந்திட வேண்டும் என்ற ஆணைக் கடிதத்தை முதலில் ஐயா தான் பார்க்க வேண்டும் என்று ஆவலோடு அவரைத் தேடிக் கொண்டு போனாள். சீக்கிரமா நகருங்க. இந்த குச்சிய தாண்டி யாரும் அம்பாள்கிட்ட போகப்படாது. அர்ச்சனை எல்லாம் இங்கயே சொல்லுங்கோ. போங்க போங்க. நகருங்க. போ போ சத்தம் கேட்டது. இதே வார்த்தை தான் தனக்கு மாற்றத்தைத் தந்ததை ஒரு நிமிடம் நினைவுபடுத்தினாள். அன்றொரு நாள் இதே நேரம் எப்பொழுதும் போல வந்தவளுக்கு அன்றைய தினம் மாறும் என்று தெரியாதவளாய் வந்தாள். ஏம்மா நீ எல்லா அம்பாள்கிட்ட உள்ளே போகப்படாது. இங்க நின்று கும்பிடு. ஆபிசர் சொல்லிருக்கார். (எழுந்து நின்று) வாங்க அம்மா. உள்ளே வாங்க. ஆடி வெள்ளிக்கிழமையோ வளையல் அலங்காரத்தோடு இருக்கா. நமஸ்காரம் பண்ணிக்கோம்பா என்று வடக்குத் தோட்டத்து சாந்தி தட்டில் இட்ட ஐநூறை இடுப்பில் முடிந்து வைத்தார். பாத்துங்க சாமி அறநிலையத் துறை தேர்வு அறிவிப்பாயிருக்கு. நானும் பாஸாகி ஆபிசரா வந்தேனா. நான் சொல்லும் நேரம், இடத்துல தான் நீங்க இருக்கணும். பார்த்துக்கலாம் சாமி. யாரு எங்க நிக்கணும்னு என்று சொல்லிச் சென்ற இடத்தில் அம்பாள் பூமாலையோடு வரவேற்ற சிவலிங்கத்தைக் கண்டாள். ரெண்டு வருஷம் போகட்டும். நம்ம கோயிலுக்கே வேலைய மாத்திக்கலாம்னு இருக்கிறேன் என்றாள் பத்மாவதி. மாத்திக்க வேண்டியது நீ இல்லமா நான் தான் என்று புன்னகைத்தார்.

முனைவர் இரா.மகேஸ்வரி

கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை

# நல்வரவு ஆகுக

வாம்மா... நல்லா இருக்கியா?... இன்னைக்கு என்ன விசேஷம் என்றார் முத்து ஐயர்... ஒன்னுமில்ல அண்ணா ஆர்டர் வந்திருச்சு. அதான் சிவலிங்க ஐயாவ பார்த்துட்டு அம்பாளுக்கும் ஒரு அர்ச்சனையை பண்ணிட்டு வேலைக்கு சேர்ந்திடலாம்னு இருக்கிற. அதான் கூட்டம் கம்மியா இருக்கும்னு கோயிலுக்கு வந்தேன். ஆகட்டுமா என்று சொல்லி நகர்ந்தார் முத்து ஐயர். பத்மாவதிக்கு இந்த நாள் பொன்னான நாளாக அமையும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை P.பத்மாவதி B.Com இணை இயக்குநர் பதவிக்கு பணியில் சேர்ந்திட வேண்டும் என்ற ஆணைக் கடிதத்தை முதலில் ஐயா தான் பார்க்க வேண்டும் என்று ஆவலோடு அவரைத் தேடிக் கொண்டு போனாள். சீக்கிரமா நகருங்க. இந்த குச்சிய தாண்டி யாரும் அம்பாள்கிட்ட போகப்படாது. அர்ச்சனை எல்லாம் இங்கயே சொல்லுங்கோ. போங்க போங்க. நகருங்க. போ போ சத்தம் கேட்டது. இதே வார்த்தை தான் தனக்கு மாற்றத்தைத் தந்ததை ஒரு நிமிடம் நினைவுபடுத்தினாள். அன்றொரு நாள் இதே நேரம் எப்பொழுதும் போல வந்தவளுக்கு அன்றைய தினம் மாறும் என்று தெரியாதவளாய் வந்தாள். ஏம்மா நீ எல்லா அம்பாள்கிட்ட உள்ளே போகப்படாது. இங்க நின்று கும்பிடு. ஆபிசர் சொல்லிருக்கார். (எழுந்து நின்று) வாங்க அம்மா. உள்ளே வாங்க. ஆடி வெள்ளிக்கிழமையோ வளையல் அலங்காரத்தோடு இருக்கா. நமஸ்காரம் பண்ணிக்கோம்பா என்று வடக்குத் தோட்டத்து சாந்தி தட்டில் இட்ட ஐநூறை இடுப்பில் முடிந்து வைத்தார். பாத்துங்க சாமி அறநிலையத் துறை தேர்வு அறிவிப்பாயிருக்கு. நானும் பாஸாகி ஆபிசரா வந்தேனா. நான் சொல்லும் நேரம், இடத்துல தான் நீங்க இருக்கணும். பார்த்துக்கலாம் சாமி. யாரு எங்க நிக்கணும்னு என்று சொல்லிச் சென்ற இடத்தில் அம்பாள் பூமாலையோடு வரவேற்ற சிவலிங்கத்தைக் கண்டாள். ரெண்டு வருஷம் போகட்டும். நம்ம கோயிலுக்கே வேலைய மாத்திக்கலாம்னு இருக்கிறேன் என்றாள் பத்மாவதி. மாத்திக்க வேண்டியது நீ இல்லமா நான் தான் என்று புன்னகைத்தார்.

முனைவர் இரா.மகேஸ்வரி
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை

## நட்பு



பணம் இருந்தால் வருவேன்
என்பது சொந்தம்
மனம் இருந்தால் வருவேன்
என்பது காதல்
எதுவும் வேண்டாம் நான் இருக்கிறேன்
என்பது நட்பு

காணாமல் காதல் வரலாம்
கற்பனை இல்லாமல் கவிதை கூட வரலாம்
ஆனால் உண்மையான அன்பு இல்லாமல்
நட்பு வராது

அதிக உயரங்களை அடைய உதவும்
நண்பர்கள் கிடைப்பது அரிது
ஆனால் உயரத்தில் இருந்து விழும் போது
தாங்கிப் பிடிக்கும் நண்பர்கள் கிடைத்தால்
அது கடவுள் தந்த வரம்

அ.முஹமது முஹஸின்
முதலாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்

## பெண்



மலரென்றும் மதியென்றும்
மதிக்க வேண்டாம்
மதிக்காமல் எந்தப் பெண்ணையும்
மிதித்து நசுக்கவும் வேண்டாம்

கற்புக்கரசி என்று கற்சிலையும்
வேண்டாம்
கணவருக்கு அடிமையென
சாஸ்திரங்களும் சொல்ல வேண்டாம்

பெண்ணால் உலகம்
பெருமை கொள்ளும்
பெருமை சோதனைகளை
உந்தன் பொறுமை வெல்லும்

பெண்ணை பெண்ணென மட்டும்
மதித்திடுவீர்
இது பெண்ணியம் அல்ல தோழரே
ஒரு பெண்மையின் வேண்டுகோள்

கு.ஸ்ரீமாரி
இரண்டாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்

## என் இனிய தமிழே

தமிழ்

உன்னை என்னவென்று நான் சொல்ல?
ஒன்றா, இரண்டா உன் புகழைப் பாட

அ முதல் ஔ வரையினுள் அடங்கி
ஆழியில் இருந்து அகிலத்தில் நுழைந்து
ஓம் என்னும் வார்த்தைக்கு உகந்ததாய்
தொன்றுதொட்டு
தொடங்கி வரும் மக்களின் உயிராய்
மூன்றெழுத்துக்குப் பேர் போன சொல்லாய்
குருதியின் ஓட்டமாய்
எங்கள் உயிரின் ஓசையாய்

அனலும் பனியுமே
பணிந்து போகின்றதே

உன்னைக் கண்டால்
சூரியனும், சந்திரனுமே
அசந்து போகின்றதே
உன் பெயரைச் சொன்னால்
ஆண்டி முதல் அரசன் வரை ஆளும்
எங்கள் தமிழே

தேசப்பற்றைக் கண்டேன் உன்னிடத்தில்
ஓர் ஆசானாய் இருந்தாய் என்னிடத்தில்
சிலையாய் இருந்த என்னை
சித்திரமாய் மாற்றிய உன்னை
என்னவென்று நான் சொல்வேன்?
என்றும் உன் புகழைப் பாடும்

கௌசல்யா கணேசன்
மூன்றாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்

# பேயால் மனிதருக்கு ஏற்பட்ட வாழ்வு



முன்னொரு காலத்தில் கந்தசாமி என்ற இளைஞன் சிங்காரபெட்டி என்ற சிறிய கிராமத்தில் வாழ்ந்து வந்தான். சிறு வயதிலேயே அவனது பெற்றோர் இறந்து விட்டனர். அவன் வந்த ஊரில் வாழப் பிடிக்காமல் நகரத் திற்கு வேலை செய்ய கிளம்பினான். செல்லும் வழியில் அன்று இரவு ஒரு ஆலமரத்து அடியில் படுத்துவிட்டு காலை செல்லலாம் என்று நினைத்து அங்கே சென்று படுத்தான். காற்று மிகவும் வேகமாக வீசியது. குளிரில் நடுங்கியபடியே உறங்கிக் கொண்டிருந்தான்.உறங்கிக் கொண்டிருக்கும் போதே அவனை யாரோ எழுப்பினார்கள். திடீரென எழுந்து பார்த்தால் ஆலமரத்துக்கு மேலே ஒரு கருப்பு நிறமுள்ள உருவம் ஒன்று நின்று கொண்டு இருந்தது. கந்தசாமி மிகவும் பயந்து போனான். அந்தக் காற்றிலும் கூட அவன் முகம் முழுவதும் வேர்த்துப் போய் விட்டது. மெல்லிய குரலில் அந்த கருப்பு உருவத்தைப் பார்த்து யார் நீ என்று கேட்டான். உடனே அந்த கருப்பு உருவம் பயப்படாதே நானும் உன்னைப் போல் ஒரு மனிதன் தான் என்று கூறியது. தற்பொழுது பேயாக இருக்கிறேன். சில வருடங்களுக்கு முன்பு அதாவது (100) ஆண்டுகள் முன்பு இங்கு வாழ்ந்து வந்தேன். ஒரு நாள் இந்தக் காட்டிற்கு வந்தேன். இங்கு ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்து ,கேலி செய்து சிரித்தேன். கோபம் அடைந்த முனிவர் பேயாகும்படி சாபம் விட்டார். பிறகு நான் மன்றாடினேன். விமோசனம் சொல்லுங்கள் என்று கேட்டேன். உன் கதையை எந்த மனிதன் பொறுமையோடு கேட்கிறானோ அன்று நீ மீண்டும் மனிதனாவாய். இதைக் கேட்ட உடனே அந்தப் பேய் மறைந்து அழகான வாலிபனாகத் தோன்றினான். அந்த அழகான வாலிபன் வானம் வரை உயர்ந்து நின்றான். என்னை எப்போது நினைத்தாலும் நல்லதே நடக்கும் என்று சொல்லி மறைந்து விட்டான். கந்தசாமிக்கு எல்லாமே கனவு போல் இருந்தது. விடிந்த உடன் புதிய நகரத்திற்கு அடைந்தான். அங்கு அரசரின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு போட்டிகள் நடந்தன. கந்தசாமி அந்தப் போட்டிகளில் அந்தப் பேயை நினைத்து வெற்றி பெற்று அரசனிடம் பரிசுகளை வாங்கினான். மிகவும் மகிழ்ச்சியில் இருந்தான் கந்தசாமி. இதுவே மனிதருக்கு ஏற்பட்ட வாழ்வு.

கி.மலர்க்கொடி
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## அன்னை

விடுமுறை என்கிற
வார்த்தைக்கு இடமில்லை இவள்
வாழ்க்கையில்



## வாழ்க்கை



இழந்ததைத் திரும்பப் பெறலாம்
தவற விட்டதைத் திரும்பப் பெற முடியாது
வாய்ப்பாக இருந்தாலும் சரி
வாழ்க்கையாக இருந்தாலும் சரி

ப.திவ்யா
முதலாம் ஆண்டுஇளங்கலை வரலாறு

# அம்மா

தாய்மையின் தியாகம்

தாய் என்ற ஒற்றைச் சொல்லின் பொருளாக அளவு கடந்த அன்பு மற்றும் எண்ணில் அடங்காத தியாகம் என்று சொல்ல முடியும். ஒரு தாயானவள் ஒரு குழந்தையினைப் பெற்றெடுத்து பாராட்டி சீராட்டி பாதுகாத்து வளர்ப்பதற்காக தன்னையே அர்ப்பணிக்கின்றார்.

கருவறையில் தாங்கினாள் ஒரு பெண்
தாயாக வகுப்பறையில் தாங்கினாள் ஒரு
பெண் ஆசிரியையாக கல்லறையிலும்
தாங்குவாள் ஒரு பெண் பூமாதேவியாக
சுமைகளையும் சுகங்களாக பார்ப்பவள் பெண்
பெண்மைக்கு எதிர் ஆண்மை தாய்மைக்கு
எதிர் விடை தெரியவில்லையே தாய்மைக்கு
நிகர் இறைமை இல்லை இல்லை
இறைமையை விட உயர்ந்தது தாய்மை
தாய்க்கும் தாய்மை உண்டு நாய்க்கும்
தாய்மை உண்டு பேய்க்கும் தாய்மை உண்டு
ஏனோ இந்த பாக்கியம் ஆண்களுக்கு கிட்டவில்லை
பெண்களுக்கு கண்டு என்னால்
வியக்கவும் வணங்கவும் தான் முடிகிறது



த.லோகநாயகி
முதலாம் ஆண்டு கணினி பயன்பாட்டியல்

# என் இனிய தனிமையே

நாட்காட்டியில் நாளைப் பார்த்தேன்
அது நகர்வதாய் தெரியவில்லை
காலம் அதுகைகூடும் என்று எதிர்பார்த்தேன்
கைகூடும் காலமும் வரவில்லை
திகைத்துப் போய் நின்றேன்
திக்குத் தெரியாமல்
திசைகள் நான்கிலும் தேடிப்பார்த்தேன்



எவருமில்லை
இறுதியில் கைகோர்த்து நின்றது
தனிமை மட்டும் தான் அதனைத்
தழுவிக் கொண்டேன்
இரவிலும், பகலிலும் இனிமையுடன்
நகருகின்றேன் என் இனிய
தனிமையுடன்

கௌசல்யா கணேசன்
மூன்றாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்

## சிறகை விரி வானம் நோக்கி

பெண்ணே!
நீ ஏன் இன்னும் முடங்கிக் கிடக்கிறாய்?
நீ இன்னும்
கருவறை இருட்டையே
நினைக்கிறாயோ?
இல்லை! வெளியே வா!
உனக்காக விரிந்து கிடக்கிற
வானத்தைப் பார்!
"பொட்டப்புள்ளைய அடக்கி வாழ" - எனும்
இரைச்சல் எத்திசையும் கேட்குதோ?
இல்லை!வெளியே வா!
"வீட்டு வேலையை பழக்கு போற இடத்துல
பொறந்த வீட்டு பெருமை
வந்து சேரும் - எனும்
சுயநல வசை - நாலு
சுவற்றிலும் தொனிக்குதோ?
இல்லை!வெளியே வா!



பெண்ணே!
நீ இதற்காக பிறந்தவள் அல்ல
பார் எங்கும் படித்து
கல்வி சேவை செய்து - மதிப்போடு
வாழப் பிறந்தவள் நீ
மருத்துவத்தில் உன்னைப் போன்ற
பெண்களை எதிர்பார்த்து
காத்து கிடக்குது உலகம்
நீ ஆறுதலாய் பேசி - அவர்களுக்கு
அளிக்கும் மருந்தே - நோய்
இன்றி வாழ உதவும்

பெண்ணே!
கனநித்திரையை விட்டெழுந்து
சீறும் சிங்கமாய் மாறு
வாழ்க்கை ஒரு தரம் என்பதை
மறந்த நீ
வாழும் இந்த வாழ்க்கையை மாற்று
பெண்ணே!
நீ சிறகை மட்டும் விரி
உனக்காக அடுத்த
இதழை ஆண்டவர் விரிப்பார்
பெண்ணே!
வானத்தை அண்ணாந்து பார்
உன் மனதைப் போன்ற
ஆழ, அகலம் கொண்ட
இந்த உலகைப் பார்
உன்னைத் துரத்தும்
பெண்ணடிமையின் வலியை
மூட்டைப் பூச்சி போல் ஒழி
விண்ணை முட்டும் புகழ்
உன் காலடியில்
வந்து சேரும்
எப்போது?
நீ எடுக்கும் ஒவ்வொரு
துணிச்சலான எதிர்நீச்சலால்...

யா.கிறிஸ்டிபுனிதா
மூன்றாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்

## ஆசைகள்

உலகின் ஆசைகள் கோடி
அதை மெய்கொணரத் தேடி
சிக்கியதோ, சில ஆசைகள் தான்
ஆசை என்றாலே அடைய
முடியாததாகத் தான்
இருக்கும், அதை அடைய நினைக்கும்
ஓர் முயற்சியில்
என்னின் சில ஆசைகள்
கூண்டை விட்டுப் பறக்க ஆசை
ஞாயிற்றை மறைக்க ஆசை
திங்களைத் தீண்டிவிட ஆசை
பண்பைப் பறைசாற்ற ஆசை
கடமையைக் கையாள ஆசை
பாசத்தை விளைவிக்க ஆசை
துரோகத்தை வேரெடுக்க ஆசை
துணிச்சலை துணைக்காட்ட ஆசை
மாண்பை மதிக்க ஆசை
பெண்மை அறிய ஆசை
முல்லையாய் மலர ஆசை
சில்வண்டாய் சிலிர்க்க ஆசை
கம்பனாய் கவிபாட ஆசை
புத்தனாய் போதிக்க ஆசை
கள்வனாய் களவாட ஆசை
சிற்பியாய் செதுக்க ஆசை
ஆசை, ஆசை என்று எண்ணிக் கொண்டு
போகையில், பேராசையில் முடிகிறது
இருப்பினும் அதுவும் ஓர் ஆசைதான்
எமக்கு



கௌசல்யா கணேசன்
மூன்றாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்

# பெண்ணின் சுதந்திரம்



சொல்லுக்குள் அடங்காது பெண் துயரம்
சொன்னாலும் புரியாது பெண் துயரம்
ஆண் என்றால் ஆணவம்
பெண் என்றால் கேவலம்
கேலி செய்யும் பொருட்டாக என்னும்
கேவலப் பிறவிகள் இன்னும்
பெண் சுதந்திரம் பேசும் உலகம்
பெண் சுதந்திரத்தோடு இருக்கின்றாளா
என்று ஏன் பேச மறுக்கின்றது?
வெறும் சட்டிப் பானைக் கழுவுவதே
பெண் சுதந்திரமா?
(இல்லை)
வெட்டிக்கதை பேசுவதே பெண்
சுதந்திரமா?



பிஞ்சுக்குள் நஞ்சு விளைக்கும் உலகில்
பேசும் உரிமை பெண்களுக்கு இல்லையெனில்
இதில் "பேச்சுரிமை சட்டம்" எங்கு
முளைத்தது?
பெரியாரின் பேச்சும், அண்ணாவின் மூச்சும்
அன்றோடு முடிந்ததா?
இம்மூர்க்கத்தனமான உலகில் வெறும் முட்டாள்கள்
பெண் உலவ வேண்டுமா?
நறுக்கென்று நாலு வார்த்தை கேட்டால்
"வாயாடி"
நச்சென்று நாலு அறிவுரை கொடுத்தால்
"அகம்பாவக்காரி"
அட என்னடா உலகம் இது!!!
நடைப்பிணமாய் வாழ்வதே
பெண் சுதந்திரமா?
ஆணினமே
அன்பாக பேச வேண்டாம்
ஒரு அக்கறையும் காட்ட வேண்டாம்
ஓர் உணர்வுள்ள உயிராகப் பெண்ணை எண்ணுங்கள்
இதுவெ எமது வேண்டுகோள்

கௌசல்யா கணேசன்
மூன்றாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்

## ஆதரவற்ற தங்கையின் அழுகுரல்

கண்மூடி அமர்ந்தால் கண்ணீர் ததும்புகிறது
காரணம் நான் பெண் என்பதாலா?
ஓர் பெண்ணின் வாழ்வில்
முதல்வனாய் தந்தை இருக்க
அரசனாய் கணவன் இருக்க முடிந்தது
என்கின்றனர் பலர்
இடையில் காத்து நிற்கும் காப்பாளன்
இல்லையே என்கின்றனர் பலர்
அந்த வரிசையில் நானும் ஒருத்தியாய்
நிற்கின்றேன்... நிர்கதியாய்...
நித்தமும் நிதானம் இழந்து கிடக்கின்றேன்
நிதர்சனம் கண்டு தவிக்கின்றேன்
ஏன் எதற்காக
"அண்ணன் என்னும் ஆண் மகனுக்காக"
தாயாய் தமக்கை இருக்கையில்
தந்தையாய் அண்ணன் இல்லையே
என்று ஏங்குகின்றேன்



இன்று வரை
சிந்திக்கின்றேன் - படைத்தவனுக்கு என் மேல்
என்ன கோவம் என்று
புலம்புகின்றேன் - அண்ணன் ஒருத்தன்
இல்லையே என்று
வருந்துகின்றேன் - வாழ்வின் வழித்துணை
இல்லையே என்று
கதறுகின்றேன் - காக்கும் கரங்கள்
இல்லையே என்று
வெறுக்கின்றேன் - வெறும் மரமாய்
இருக்கின்றேன் என்று
விரும்புகின்றேன் - அதில் ஒரு விழுதாய்
அண்ணன் வேண்டும் என்று
இறுதியில் அன்பையும் அரவணைப்பையும்
எதிர்பார்க்கின்றேன் ஆதரவற்ற
தங்கையாய் இன்று

## வாழ்க்கையின் எதார்த்தம்

கடவுளின் படைப்பே ஓர் விசித்திரம் தான்
இதில் ஆண் என்ன? பெண் என்ன?
அரசன் ஆண்டி ஆவதும், ஆண்டியவன் அரசன்
ஆவதும் வாழ்க்கையின் எதார்த்தம் தான்
இருப்பவன் ஆடுவதும், இல்லாதவன் முடங்குவதும்
வாழ்க்கையின் எதார்த்தம் தான்
கஷ்டங்கள் படாமல் காலங்கள் ஓடுவதில்லை
என்பது வாழ்க்கை தத்துவம்
அதே போல் கஷ்டங்கள் மட்டுமே காலங்களை
ஒட்டுவதில்லை என்பது ஓர் வாழ்க்கை தத்துவம் தான்
பாமர மக்களுக்கும் மனமின்றி தான் மானிடன்
என மறந்து மேல் வர்க்கம் கீழ் வர்க்கம்
நடுத்தரவர்க்கம் என வேறுபடுத்திப் பார்க்கின்றனர்
உண்ணும் உணவிலும் வேறுபாடு
பார்க்கும் பார்வையிலும் வேறுபாடு
ஆம், நடுத்தர வர்க்கம் தான் இருப்பினும் வறுமையின்
பிடிக்கு என்ன தான் தெரியும்
வாட்டி வதைக்க மட்டும் தான் தெரியும்
எல்லோரும் சொல்வார்கள் தை பிறந்தால் வழி பிறக்குமாம்
அட மூடர்களே
வழி எங்குடா பிறக்கிறது மாறாக வேதனை
தான் வாட்டி வதைக்கிறது
சொல்பவர்கள் சொல்லட்டும் செவி கொடுக்காதே
செய்பவர்கள் செய்யட்டும் என்று வேடிக்கை பார்க்காதே
எல்லாம் மாறும் எதுவும் மாறும் அதுதான் எப்போதும்?



கௌசல்யா கணேசன்
மூன்றாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்

# சமூகத்தில் நமது பண்பாடு



முன்னுரை

சமூகம் என்பது மனிதனை சாதிக்கத் தூண்டும் ஓர் அங்கமாகவே உள்ளது. இவ்வுலகில் சாதிப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. சாதிக்கத் துடிப்பவர்களும், வாழ்க்கையை வெல்லத் துடிப்பவர்களும் முதலில் தன்னை வெல்ல வேண்டும். அதில் ஒன்று விதி வழி விடாது, மற்றொன்று மனிதர்களின் விதி வழிவிடாது. இவ்விரண்டையும் தாண்டி சென்றால் மட்டுமே முதலில் நம்மை நாமே வெல்ல முடியும். நீங்கள் எதை செய்தாலும் சமூகத்தில் ஒரு கூட்டம் உங்களை புகழும் மற்றொரு கூட்டம் உங்களை இகழும், எப்போதுமே மனிதர்களாகிய நாம் புகழ்ச்சிக்கும், இகழ்ச்சிக்கும் இடையில் பயணித்தால் மட்டுமேதான் சமூகத்தில் நம்மால் உயர முடியும்.

சமூக சேவை

என் கடன் பணி செய்து கிடப்பதே என்பது சான்றோர் வாக்கு. ஆம். மனிதர்களாகப் பிறந்தோம். அனைவரும் நமக்காக மட்டுமே வாழாமல் பிறருக்காகவும் வாழ வேண்டும். ஆனால், இன்றைய காலகட்டத்தில் பிறர் எப்படிப் போனால் எனக்கென்ன நான் நன்றாக வாழ வேண்டுமென்று சிலர். இல்லை இல்லை பலர் இந்தப் பூமிக்கு பாரமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.

சாலையில் இருவர் அடிபட்டுக் கிடந்தாலே, அவரைத் தூக்கிச் சென்று மருத்துவமனையில் சேர்க்கவே இன்றைய சமூகத்தினர் அஞ்சுகின்றனர். கேட்டால், நீதிமன்றம், காவல்நிலையம் என்று யார் அலைவது? என்று கேட்கிறார்கள். ஆனால் அதுவே சாலையில் பணப்பையோ அல்லது வேறு ஏதேனும் பண மதிப்பிலானே பொருளோ இருந்தால் உடனே அவற்றைக் கண்டால் வேகமாகச் சென்று எடுத்து வைத்துக் கொள்கின்றனர் சிலர். இப்போது மட்டும் காவல் நிலையம் நீதிமன்றம் என்ற அலைச்சல் இருக்காதா? இன்றைக்குக்கேவலம் பணத்திற்கு உள்ள மரியாதையும், மதிப்பும், மனித உயிருக்கு இல்லையே என்பது தான் கசப்பான உண்மையும் கூட.

அன்றைக்கு சதி இன்றைக்கு சாதி

அன்றைய காலகட்டத்தில் கணவன் இறந்து விட்டால் மனைவி, கணவன் எரிகின்ற தீயிலேயே குதித்து தானும் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும். இக்கொடூரமான முறை சதி என்னும் உடன்கட்டை ஏறுதல் என்றழைக்கப்பட்டது. இக்கொடிய பழக்கத்தை அப்போதைய இந்திய ஆளுநர் வில்லியம் பெண்டிங் பிரபுவும், சமூக சீர்திருத்தவாதியான இராஜாராம் மோகன்ராயும் இணைந்து சட்டப் போராட்டம் நடத்தி அதனை ஒழித்தனர்.

ஆனால் இன்றைக்கு சாதி என்ற ஒரு தொற்று நோயின் காரணமாக திருமணம் நடப்பதற்கு முன்பாகவே ஆணும், பெண்ணும் சேர்ந்து தற்கொலை செய்து கொள்கின்றார்கள். அன்றைக்கு சதியின் மூலமாக ஆண் இறந்த பிறகு பெண் இறந்தாள். ஆனால் இன்றைக்கு சாதியின் மூலமாக ஆணும், பெண்ணும் சேர்ந்து இருக்கிறார்கள்.

சாதிகள் இல்லையடி பாப்பா
குலம் தாழ்த்தி உயர்த்திச் சொல்லல் பாவம்

என்ற பாரதியாரின் பாடலை நாம் பள்ளிகளில் படித்ததுண்டு. ஆனால், அதே பள்ளியில் தான் ஜாதி சான்றிதழ் இல்லை என்றால் பள்ளியில் இடமே இல்லை. அப்போது இருந்து பள்ளியில் சேர்ந்தோமேயானால் அப்பள்ளியில் நடத்தப்படும் பாடமோ "சாதிகள் இல்லை" என்பது. இது தான் இன்றைய சமூகத்தில் நிலவி வரக்கூடிய மிகப்பெரிய கொடுமை.

சமூகத்தில் நமது தாய்மொழி :

தமிழ் நமக்கு மட்டும் தாய்மொழி அல்ல உலகில் உள்ள அத்தனை மொழிகளுக்கும் தாய்மொழி நமது தமிழ்தான். தமிழில் முதலெழுத்து "அ" அம்மா என்று தொடங்குவோம். ஆங்கிலத்தில் முதலெழுத்து 'A' Apple என்று தொடங்குவோம். உணவிலிருந்து தொடங்குவது தான் நமது தமிழ். துவக்கத்திலேயே இனிமையே கொண்டுள்ள மொழி உலகில் உண்டென்றால் அது கட்டாயம் தமிழ்மொழி மட்டும்தான்.

அப்பேர்ப்பட்ட தமிழ் மொழியில் நாம் பேசவே தயங்கி வருகின்றோம். இன்றைய பெற்றோர் தங்களின் குழந்தைகளை, தமிழ்வழி பள்ளிகளில் சேர்க்கவே தயங்குகின்றனர். காரணம் அங்கு ஆங்கிலம் முறையாகக் கற்றுக் கொடுக்கப்படுவதில்லையாம். அத்தகைய பெற்றோருக்கு ஒரு கேள்வி. ஆங்கிலம் படித்த மாணவர்கள் தற்போது வெளிநாட்டு முதலாளிகளுக்குக் கீழ் அடிமைகளாக வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தாய்மொழியில் கல்வி பயின்றவர்கள் சுயமாக சிந்தித்து முன்னேறியிருக்கின்றார்கள். அதற்கு மிகச் சிறந்த உதாரணம் அரசு பள்ளியில் படித்து அரசையே ஆண்ட அப்துல் கலாம் அவர்கள். இஸ்ரோவின் முன்னாள் தலைவர் சிவன் மற்றும் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள். பல சாதனை மனிதர்கள் தாய்மொழி வழி கல்வியில் தான் பயின்றவர்கள். இன்னும் சொல்ல வேண்டும் என்றால் சீனாவில் 90 சதவித மக்களுக்கு ஆங்கிலமே தெரியாதாம். அவர்கள் தாய்மொழியை மட்டுமே பயன்படுத்தி முன்னேறவில்லையா?

நாம் பணத்தோடு வாழ்வதற்காக உலகின் எந்த மொழியை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் நாம் உயிரோடு வாழ்வதற்காக நம் தாய்மொழியான தமிழ் மொழியை ஒரு போதும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

ஆங்கிலத்திற்கும் தாய்மொழி தமிழே

உலகின் பல மொழிகளில் தமிழின் சொற்களை காண முடியும். ஆனால் உலகிலுள்ள எந்த மொழியின் சொற்களையும் தமிழில் காண முடியாது. காரணம், தமிழுக்கும் சரி, தமிழருக்கும் சரி கொடுத்துதான் பழக்கமே ஒழிய எடுத்து பழக்கமில்லை.

ஆங்கிலம் தமிழிலிருந்து எடுத்துக்கொண்ட சில சொற்களை இங்கு காண்போம்.

| | | |
|---|---|---|
| கலாச்சாரம் | - | Culture |
| கொல் | - | Kill |
| காசு | - | Cash |
| தாக்கு | - | Attack |
| உடன் | - | Sudden |
| பேச்சு | - | Speech |
| பஞ்சு | - | Sponze |

இப்படி ஆயிரக்கணக்கான சொற்கள் தமிழ் மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கு சென்றுள்ளன.


முடிவுரை

சமூகத்தில் நிலவி வரும் பிரச்சனைகளைப் பற்றியும் அதற்கான தீர்வுகளைப் பற்றியும் இன்னும் எழுதிக் கொண்டே போகலாம். எனவே அனைத்து மக்களும் சமூகத்தில் சிறந்த சேவை செய்து, சாதியை முடிந்தவரை அல்ல முழுவதுமாக தவிர்த்து, நம் தாய்மொழியான தமிழைப் போற்றி, பாதுகாத்து வாழ்வோம்.

ச.நாகராஜ்
முதலாம் ஆண்டு இளநிலை வணிகவியல்

## உதிரிப் பூக்கள்

பூக்கடையில்
சிதறிய உதிரிப் பூக்களை
பார்த்து - புன்முறுவல்
பூத்தாள்
என் வீட்டு உதிரிப்பூ
உதிரிப் பூக்களை
கையில் ஏந்தி முகர்ந்தாள்
அவள் - அவளைப் பார்த்து



ஏங்கினாள்
முதிர்கன்னி
இறைவனுக்கும்
இறைவனிடம் சென்றவனுக்கும்
பயன்படும் உதிரிகள்
சில மனுஷிகளின் கைகளுக்கு
எட்டவில்லை

ப.சதிஷ்குமார்
இரண்டாம் ஆண்டு முதுகலை தமிழ் இலக்கியம்

## அப்பா

ஆயிரம் மடங்கு அன்பை
உள்ளே வைத்துக் கொண்டு
எதிரியைப் போல் நடமாடும்
ஓர் உயிர் அப்பா...
தாயைத் தோழியாகத் தந்த கடவுள்



தந்தையை ஒரு தோழனாகத்
தந்துள்ளான்... எத்தனை சோகங்கள்
மனதில் ஏற்பட்டாலும் வெளியில்
சிரித்துக் கொண்டே இருக்கும் ஒரு
ஜீவன் தந்தை என்ற ஜீவன் மட்டுமே

மு.கவின்
முதலாம் ஆண்டுஇளங்கலை வரலாறு

---


**1956ஆம் ஆண்டு இந்திய அச்சக நூல்களின் பதிவுச் சட்டம்**
**விவர அறிக்கைப் படிவம் விதி 8**

| | | |
|---|---|---|
| வெளியிடப்படும் இடம் | : | திருப்பூர் |
| வெளியிடப்படும் காலம் | : | ஆண்டுக்கு ஒரு முறை |
| அச்சிடுவோர் பெயர் | : | சாய் கிராபிக்ஸ் |
| தேசிய இனம் | : | இந்தியர் |
| முகவரி | : | 115, பெரிய கடை வீதி, உடுமலைப்பேட்டை - 642 126. |
| வெளியிடுவோர் பெயர் | : | முனைவர் வ.கிருஷ்ணன் |
| தேசிய இனம் | : | தேசிய இனம்:இந்தியர் |
| முகவரி | : | முதல்வர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் |
| ஆசிரியர் | : | முனைவர் சி.அமிர்தராணி |
| தேசிய இனம் | : | இந்தியர் |
| முகவரி | : | வணிகவியல் துறை இணைப் பேராசிரியர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் |

முனைவர் வ.கிருஷ்ணன் ஆகிய நான் இதன் மூலம் மேலே காணப்படும் விபரங்கள் யாவும் எனக்குத் தெரிந்தவரை முற்றிலும் உண்மை என நம்பகமாக அறிவிக்கிறேன்.

திருப்பூர்
25-05-2023

(ஒம்) முனைவர் வ.கிருஷ்ணன்
வெளியீட்டாளர்

### மின்சாரக் கம்பிகள்

இரட்டை வால்
குருவிகளுக்குத் தெரியாது
எம் காதல்
தண்டவாளக் கம்பிகளைப்
போல், என்று!!!

### அரசியல்

மாநில அரசு - தலையாட்டி பொம்மைகள்
மத்திய அரசு - பேட்டரி இல்லாத பொம்மைகள்
மக்கள் - தூக்கி எறியப்பட்ட பொம்மைகள்

### பெண்

கும்பிடுகையில்
தீபஒளி,
தகாமல் தீண்டுகையில்
காட்டுத் தீ
உன் உயிரணுவின்
வெப்பம் கூட
அவளே!!!




### காதல்

உண்மைக் காதல்
எனில்,
உன்னில் என்னை
இழக்கவும் தயார்!

மோ.சித்ரா தேவி
மூன்றாம் ஆண்டுஇளங்கலைத்தமிழ் இலக்கியம்

### விடுகதைகள்



1.நிலத்தில் முளைக்காத செடி, நிமிர்ந்து நிற்காத செடி அது என்ன?

2.தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?

3.உடம்பு முழுவதும் முள் அது என்ன?

4.நீ எங்கு சென்றாலும் தொடர்ந்து வருவான் அவன் யார்?

5.கையும் இல்லை, காலும் இல்லை, ஓடிக்கொண்டே இருப்பேன் நான் யார்?

6.சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது அது என்ன?

7.இவனும் ஒரு பேப்பர் தான் ஆனால் மதிப்போடு இருப்பான் அவன் யார்?

8.வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை. அது என்ன?

9.ஒற்றைக் கால் மனிதனுக்கு ஒன்பது கை அது என்ன?

10.குண்டு ராஜாவுக்கு குடல் முழுக்க பல் அது என்ன?

தொகுப்பு : கேசவன்
முதலாம் ஆண்டு இளங்கலை வரலாறு

விடைகள் :

1. தலைமுடி 2.அன்னாசிப் பழம் 3.சீப்பு 4.நிழல் 5.நேரம்
6.கண் 7.பணம் 8.செருப்பு 9.மரம் 10.மாதுளை

## கவிதை

குறுகிய வட்டத்தில் குழம்பி
தவிக்காதே சிறகுகளை திறந்துவிடு
சிறையிலிருந்து பறந்து விடு
முன்னேற்றமே இல்லாமல்
இருப்பதை விட, மெதுவாக
முயற்சிப்பது எவ்வளவோ மேல்
துன்பம் நல்ல பள்ளியாக
இருக்கலாம். ஆனால் மகிழ்ச்சியே
சிறந்த பல்கலைக் கழகம்
ஒவ்வொரு தோல்வியும்
புதிய முயற்சியின் ஆரம்பம்
அதனால் முயற்சியை ஒரு
போதும் கைவிடாதே
வெற்றியின் முதல் அனுபவம் தோல்வியே
தோல்வி என்பது வாழ்க்கையின்
முடிவு அல்ல
சாதனைகளின் தொடக்கம்

K.பாப்பாத்தி
முதலாம் ஆண்டுஇளங்கலை வரலாறு

## நகைச்சுவை விடுகதை

உண்ண முடியாத பன் எது?
விடை : ரிப்பன்

உட்கார முடியாத தரை எது?
விடை : புளியோதரை



உடுத்திக் கொள்ள முடியாத ட்ரஸ் எது?
விடை : அட்ரஸ்

பேச முடியாத வாய் எது?
விடை : செவ்வாய்

சாப்பிட முடியாத மீன் எது?
விடை : விண்மீன்

ரொம்ப வெயிட்டான பறவை எது?
விடை : கருடன்

M.நவீன்குமார்
முதலாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## இலக்கை எட்டு

புதையும் விதையும் மண்ணில் முளைவிடும்
மழைத்துளியும் அதனை அணைத்து உயிர் தரும்
கடல் நீரில் கால் நனையாத பாதங்கள் இருக்கலாம்
கன்னங்களை நனைக்காமல் கண்ணீர் இருப்பதில்லை
வானவில் தோன்றி மறையலாம் வானம் ஒரு போதும் மறைவதில்லை
போகும் பாதையில் முட்கள் கற்கள்
பாதங்களைத் தைக்கலாம் பயணம் தடைபடுவதில்லை
இலையுதிர் காலம் என்பது இறப்பல்ல
இன்னொரு வசந்தத்திற்கான தொடக்கம்
தோல்வி என்பது மரணமல்ல
இன்னொரு உதயத்திற்கான பதுக்கம்
வறுமை பல வெறுமைகளை தந்தாலும்
ஈற்றில் பொறுமைக்குப் பெருமை சேர்த்து விடும்
நீ விடும் நெற்றித் துளிகள் உளி போல்
செதுக்கும் உனது இளங்கலை வரலாற்றை
தடைகளைப் படிகளாக்கு எட்டுத் திக்கையும்
உன் எழுத்தாக்கு
இலட்சியத்தை எட்டும் வரை போர்தொடு
தோண்டுங்கள் புதையல் எட்டும் வரை
நீந்துங்கள் கரை தட்டும் வரை
உழைப்பால், அறிவாற்றலால் வெற்றிப்
படிகளை எட்டுங்கள்
எட்டுத் திக்கும் உங்கள் எழுதுகோலால்
முரசு கொட்டுங்கள்
விடா முயற்சி தோல்வியைத் தேங்க வைக்கும்
வலிமையே வாழ்வை ஓங்க வைக்கும்





ம.சந்தோஷ்
முதலாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## கவிதை

ஒருவருடைய
குறைகள் மட்டுமே
உன் கண்களுக்கு
தெரியுமானால்
நீ அவர்களை
பார்க்கும் கோணம்
தவறு என்பதை
புரிந்து கொள்...!!!



வே.சதிஸ்குமார்
முதலாம் ஆண்டுஇளங்கலை வரலாறு

## நகைச்சுவை

ஒருத்தர் எப்பவும் மத்தவங்க கையை தான் எதிர் பார்த்து இருப்பாரு ஏன்?

ஏன்னா அவர் கைரேகை ஜோசியராம்

குடி குடியை கெடுக்குமாடா?

நீ வாங்கி கொடுத்தா உன் குடி கெடும். நான் வாங்கிக் கொடுத்தா என் குடி கெடும்.

என் பூட்டை உடைத்து 5 இலட்சம் திருடிட்டு போயிட்டாங்க

பூட்டுக்குள்ளே எப்படிடா 5 இலட்சம் வச்சிருந்தே?

நீரில் கல்லை போட்டால் ஏன் மூழ்குகிறது?

ஏன்னா, கல்லுக்கு நீச்சம் தெரியாதாம்

எட்டு பொருள் வாங்க சொன்னா ஏழு பொருள் வாங்கிட்டு வந்தானாம் யார் அவன்?

ஒன்னு விட்ட தம்பி

ஆறும் ஆறும் சேர்ந்தால் என்ன வரும்?

வெள்ளம் வரும்

எதுக்குடா கால்குலேட்டரோட அந்த பொண்ணு பின்னாடி சுத்தற?

கணக்கு பண்ணிட்டு இருக்கேன்

ஆசிரியர் : சுத்தம் சோறு போடும்

மாணவன் : சார், அப்படியென்றால் எது சார் கொழம்பு ஊத்தும்



அந்த நடிகையோட அளவு 36:26:36:0 அதென்ன சைபர்?

அவளோ அறிவு

வாங்க கடை இட்லி பஞ்சு மாதிரி இருக்கே எப்படி?

பருத்திக் கொட்டையை ஆட்டி இட்லி சுடுறோம்

மாப்பிள்ளை அழைப்பு எங்கிருந்து ஆரம்பம்?

சென்ட்ரல் ஜெயிலில் இருந்து

கோழி ஏன் முட்டை போடுது?

அதுக்கு 1, 2, 3 போடத் தெரியாது. அதான் முட்டை போடுது.

100ல் 1 போன மீதி எவ்வளவு?

00

8ஐயும் 8ஐயும் கூட்டினால் 9 வரும். எப்படி?

தப்பா கூட்டினால் வரும்

உங்க பட்டாசு கடை எப்படி தீப்பிடிச்சது?

மழை பெஞ்சதால கடைக்குள்ள தீமூட்டி குளிர் காய்ஞ்சேன்

அப்பா! எங்க மகன் கணக்கு வாத்தியாருக்கு கணக்கே தெரியலை. எப்படிடா சொல்ற...!

தந்தை : இளங்கலை வரலாற்றில் 0 மார்க் வாங்கி உள்ளாயே வெட்கமா இல்லையா?

மகன் : அப்பா நீ தானே சொன்னாய் பழையதை மறக்கனும் என்று

தொகுப்பு : S.கார்த்திக் ராஜா


முதலாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## அம்மா

அன்பை மட்டும் அல்ல
உணவையும் பகிர்ந்து
உண்ணும் ஒரே
தெய்வம் அம்மா



## பணம்



பணம் உள்ளவன் சொல்லை
கேட்காமலே யோசிக்கும்
பணம் இல்லாதவன் சொல்லை
கேட்கவே யோசிக்கும்
சமூகம் இது

சி.யோகநந்தினி

முதலாண்டு ஆண்டு இளங்கலை வரலாறு

## பொது அறிவு

இந்தியாவிலேயே முதன் முறையாக தனியார் மயமாக்கப்பட்ட சர்வதேச விமான நிலையம் எது? - கொச்சின் சர்வதேச விமான நிலையம்

இந்தியாவின் தேசிய திட்ட நேரம்" - GMT : 05 : 30

இந்தியா உலக அளவில் எத்தனை சதவீதம் பரப்பளவை கொண்டுள்ளது? - 2.42%

இந்திய கடற்கரையின் நீளம் - 7,516 கி.மீ

நீர் மூழ்கிக் கப்பலைத் தாக்கக் கூடிய இந்திய கடற்படையின் போர்க்கப்பல் INS கமோர்தா



இந்தியாவின் மிகப்பெரிய வணிக வங்கி - ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா

உலகத்திலேயே மிக நீளமான அணை - ஹிராகுட் அணை

உலகத்திலேயே மிகப்பெரிய கடிகாரம் - பிக்பென்

உலகத்திலேயே மிக உயர்ந்த சிலை - வோல்கா கிராட் (தாய்நாட்டின் சிலை)

பின்னலாடை தொழிலுக்கு உலகப்புகழ் பெற்றது - திருப்பூர்

தமிழ்நாட்டின் ஜவுளிகளின் சந்தை - ஈரோடு

தமிழ்நாட்டின் முதல் பெண் IPS அதிகாரி - திலகவதி

தமிழ்நாட்டில் மதுவிலக்கை முதலில் கொண்டு வந்தவர் - திரு.இராஜாஜி

கடைசியாக காந்தி தமிழகம் வந்த ஆண்டு - 1946

சென்னைப் பல்கலைக் கழகம் யாருடைய காலத்தில் தொடங்கப்பட்டது - டல்ஹவுசி

தொகுப்பு : அசோக்குமார்
முதலாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## என் வீட்டுச் செல்லப்பிள்ளை (நாய்)

என் வீட்டு செல்லப்பிள்ளை
என்றும் நன்றியுள்ள செல்லப்பிள்ளை
சத்தம் கேட்டால் குரைக்கிறாய்
உணவிட்டால் நன்றியுடன் வாலை ஆட்டுகிறாய்
எனக்கு என்ன கவலைகள் இருந்தாலும்
உன் முகம் பார்த்தால் கவலைகள் மறக்கிறேன்
என் அன்பை உன்னால் உணர முடியும்
உன் அன்பு உன்னை ரசிப்பவர்களுக்கு மட்டுமே புரியும்
இரவு முழுவதும் எனக்காக விழித்திருக்கிறாய்
அதனால் தானே நாங்கள் அச்சமில்லாமல் தூங்குகிறோம்
சமைக்கும் போதே வாசனை உணர்கிறாய்
ஆனால்
நாங்கள் சாப்பாடு கொடுக்கும் வரை பொறுமையாக காத்திருக்கிறாய்
உன்னை ரசனையோடு ரசிப்பவர்களுக்கு
நீ என்றும் செல்லப்பிள்ளை தான்



க.சசிமங்களம்
இரண்டாம் ஆண்டு இளங்கலைத் தமிழ் இலக்கியம்

## செயற்கையாக இயற்கை

பாவம் அந்தப் புத்தகங்கள் - என்ன
பாவம் செய்தது என்று தெரியவில்லை
நூலகத்திலேயே அகப்பட்டுக் கிடக்கின்றன
உலகில் உள்ள பல விஷயங்களை தனக்குள் அடக்கி வைத்துக் கொண்டு
புத்தகங்களும் அடக்கமாகத்தானே இருக்கின்றன
புத்தகத்தின் தலைப்பைப் பார்த்து அதைக் கையில் எடுத்தேன்
திருப்பி விலையைப் பார்த்தேன் வைத்துவிட்டு ஓட்டம் பிடித்தேன்
நீ படித்த புத்தகம் ஒரு நாள் மக்கிப் போகலாம்
ஆனால் படித்த உன் மூளை ஒரு நாளும் மக்கிப் போகாது
புதியதாக வாங்கிய புத்தகத்தை முதலில் படித்தது - எனது
நாக்கு அல்ல எனது மூக்கு தான்
தாயின் கருவறையும்,நூலகத்தின் பரப்பளவும் ஒன்று தான் - காரணம்
இரண்டுமே நம்மை உருவாக்கும் இடங்கள்



## ஆசிரியரும் மாணவனும் பேசிக்கொள்ளும் மொழி

பொருளாதாரத்தின் தந்தை ஆடம் ஸ்மித்(து)
மாணவர்களுக்கு நீங்கள் தான் மிகப்பெரிய சொத்து
J.M.கீன்ஸ் நவீன பேரியல் பொருளாதாரத்தின் தந்தை
உங்களால் வளர்ந்தது எங்களது சிந்தை
தனியாரும் அரசும் சேர்ந்து இயங்கினால் அது கலப்புத்துலிம்
நீங்கள் ஆசிரியராக கிடைத்தது நாங்கள் செய்த பெருந்தவம்
தேசிய வருவாயின் வளர்ச்சி நாட்டிற்கு தேவை
எங்களின் தேவை உங்களின் சேவை
J.P.சே உருவாக்கிய விதி, சந்தை
ஆசிரியரே மாணவர்களின் இரண்டாவது தந்தை
மாணவர்களுக்கு வேண்டும் நல்ல பழக்கம்
தவறு செய்யும் மாணவர்களை திருத்துவதே உங்களின் வழக்கம்
பொருளாதாரத்தின் ஏற்றத்தாழ்வு வாணிகச் சுழற்சி
என்றுமே வீண்போகாது உங்களின் முயற்சி
ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படுவது காகிதப் பணம்
இன்று உங்களின் பிறந்த தினம்
முதலாளித்துவத்தில் உண்டு தனியாருக்கு முழு சுதந்திரம்
வாழ்வில் என்றுமே உங்களுக்கு மகிழ்ச்சி நிரந்தரம்



ச.நாகராஜ்
முதலாம் ஆண்டு இளநிலை வணிகவியல்

## பொன்மொழிகள்

நிதானம் தவறும்
போதெல்லாம்
ஒன்றை மட்டும்
நினைவில் கொள்ளுங்கள்
வார்த்தைகள் கூர்மையானது
நம்மை எப்போதும்
சிதைக்கக் கூடும்
முயலும் வெல்லும்
ஆமையும் வெல்லும்
ஆனால் முயலாமை
என்றும் வெல்லாது
நல்லது செய் நல்லதே நடக்கும்
நடப்பவையெல்லாம் நன்மைக்கு

இதுவும் நிரந்தரமல்ல - இந்த உலகில்
எதுவும் நிரந்தரமல்ல
சிரிப்பவர்கள் எல்லாரும்
கவலை இன்றி
வாழ்பவர்கள் அல்ல
கவலைகளை
மறக்க கற்று
கொண்டவர்கள்
கடைசி வரை
நம்பிக்கை இழக்காதே
ஏனெனில், கடைசி வரியில்
கூட உனக்கான
வெற்றி எழுதப்பட்டிருக்கலாம்

தொகுப்பு : S.கன்னிகாஸ்ரீ
இரண்டாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## புன்னகை



கொடுப்பவரை
ஏழை ஆக்காமல்
பெறுபவரை
செல்வந்தன் ஆக்கும்
ஒரே செயல்
புன்னகை மட்டுமே

## கடின உழைப்பு




சாதிக்கும் துறைகள்
தான் வெவ்வேறே தவிர
சாதனை என்பது
எல்லா துறைகளிலும்
ஒன்று தான்

வெ.தனுஷ்
இரண்டாம் ஆண்டு இளங்கலை தமிழ்

## Life

What is Life? Life is a short
journey we travel between birth and death.
We are travelling towards our destination
without knowing the stops in the journey.
Being prepared and ready is
the best way to face life situations.



## Education

Your degree is just a piece
of paper
Your education is seen in
your behaviour.

## Trust

The most expensive thing
in the world is TRUST.
It can take years to earn and
a matterof seconds to lose.



**S.Yuvaraja**
I B.A. History

## விடுகதை

கண்டு பூ பூக்கும் காணாமல் காய் காய்க்கும் அது என்ன? - வேர்க்கடலை

அப்பன் சொரியன், ஆத்தா சடச்சி, அவர்கள் பெற்ற பிள்ளையோ சக்கரைக் கட்டி அது என்ன? - பலாப்பழம்



அக்கா போட்ட முத்து அள்ள முடியாத சொத்து அது என்ன? - கோலம்

ஒற்றை கண் உடையவன் ஊர் வாயை அடைப்பான் அது என்ன? - ஊசி

ஒரு பெட்டியில் இரண்டு தைலம் அது என்ன? - முட்டை

நீரில் பிறந்து நீரில் இறப்பான் அவன் யார்? - உப்பு

சிவப்பு பெட்டியில் தங்கக் காசு கொட்டிக் கிடக்கும் அது என்ன? - சிவப்பு மிளகாய்

வெள்ளை ராஜாவுக்கு கருப்பு ஆடை அது என்ன? - உளுந்து

ஒரு கோட்டையில் 32 படைவீரர்கள் ஒரு ராணி அந்த கோட்டைக்குள் மூன்று திருடர்கள் நுழைந்தனர். போர் நடந்தது.இரத்தம் சிந்தியது. அவர்கள் யார்?
- வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு

தொகுப்பு : சை.அஸ்லாம் பானு
முதலாம் ஆண்டு இளங்கலை வரலாறு

---

## வாழ்க்கை



வலிகள் இல்லாமல் வழிகள் இல்லை
விழிகள் மூடினால் வெற்றி இல்லை
முயற்சி இல்லாமல் மகிழ்ச்சி இல்லை
முயன்ற மனிதன் தோற்றது இல்லை
கோபம் கொண்டால் உறவு இல்லை
பாவம் செய்தால் பரிவு இல்லை
ஆசை கொண்டால் உறக்கம் இல்லை
அமைதி கொண்டால் அகிம்சையே எல்லை
அழ துணிந்தால் வானமே எல்லை!!!
கதவை தட்டாத காரணத்தால் மட்டுமே
எத்தனையோ வாய்ப்புகளை இழக்க
நேரிடுகிறது

N.பூபதி
முதலாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## மதிப்பெண்



புத்தகத்தைப் படித்தோம்
மனப்பாடம் செய்தோம்
வெள்ளைத் தாளில் ஒப்பித்தோம்
ஒரு வார்த்தைகள் கூட மறக்காமல்
கொட்டித் தீர்த்தோம்
மறந்தாலும் நினைவுக்குக் கொண்டு
வந்து எழுதினோம்
நல்ல மதிப்பெண்கள் வாங்கினோம்
இந்த மதிப்பெண்கள் யாருக்கு
என் அறிவுக்கா?
என் மனப்பாட சக்திக்கா?

ம.வெண்ணிலா
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## விடுகதைகள்

1. உடம்பில்லா ஒருவன் 10 சட்டை அணிந்திருப்பான் அவன் யார்? - வெங்காயம்
2. அடித்தாலும், உதைத்தாலும் அழ மாட்டான் அவன் யார்? - பந்து
3. கடல் நீரில் வளர்ந்து, மழை நீரில் மடிவது என்ன? - உப்பு
4. டாக்டர் வந்தாரு, ஊசி போட்டாரு, காசு வாங்காமல் போனாரு அவரு யாரு? - கொசு
5. ஒன்று போனால் மற்றொன்றும் வாழாது அது என்ன? - செருப்பு
6. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன? - சிரிப்பு
7. உயிர் இல்லாதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள் அவன் யார்? - பாய்
8. பல் துலக்காதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள் அவன் யார்? - சீப்பு
9. இளமையிலே பச்சை, முதுமையில் சிகப்பு, குணத்திலே எரிப்பு அவன் யார்? - மிளகாய்
10. காற்றைக் குடித்து காற்றில் பறப்பான் அவன் யார்? - பலூன்
11. மண்ணுக்குள்ளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார்? - மஞ்சள்
12. அள்ளவும் முடியாது கிள்ளவும் முடியாது அவன் யார்? - காற்று
13. ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான் ஒருவன் நடப்பான் - கடிகாரம்
14. வெயிலில் மலரும் காற்றில் உலரும் அது என்ன? - வியர்வை
15. கையுண்டு, கழுத்துண்டு, தலையுண்டு உயிரில்லை அது என்ன? - சட்டை
16. எப்போதும் மழையில் நனைவான். ஆனால் காய்ச்சல் வராது. எப்போதும் வெயிலில் காய்வான் ஏதும் ஆகாது அவன் யார்? - குடை
17. அனைவரையும் நடுங்க வைப்பான், சூரியனுக்கு மட்டுமே அடங்குவான் அவன் யார்? - குளிர்
18. சிறு தூசி விழுந்தாலும் குளமே கலங்கி விடும் அது என்ன? - கண்
19. பார்த்தால் கல், பல் பட்டால் நீர் அது என்ன? - பனிக்கட்டி
20. உள்ளே இருந்தால் ஓடித்திரியும் வெளியே வந்தால் விரைவில் மடியும் அது என்ன? - மீன்



தொகுப்பு : கி.சு.வைஷ்ணவி
இரண்டாம் ஆண்டுஇளங்கலை வரலாறு

## பொன்மொழிகள்

கடைசி வரை நம்பிக்கை இழக்காதே
ஏனெனில் கடைசி வரியில் கூட உனக்கென
வெற்றி எழுதப்பட்டிருக்கலாம்

அடுத்தவர் பின் நின்று புறம்
பேசாதே அறிந்து கொள்
உன் பின்னாலும் ஒருவர்
இருக்கிறார் என்று

நம்முடன் வாழ்வோரை புரிந்து கொள்வதற்கு
நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது
அவசியம்

உன்னால் முடியாது என பலர் கூறிய
வார்த்தைகளே
என்னை வெற்றியின் பக்கம்
தள்ளியது

பின்னாலிருந்து நீ விமர்சிக்கப்பட்டால்
நினைத்துக் கொள்
நீ முன்னால் இருக்கிறாய் என்று
- ஹிட்லர்


மன உறுதி இல்லாதவனுடைய
உள்ளம் குழம்பி கடலுக்கு
ஒப்பானது
- சுப்பிரமணிய பாரதியார்

பழுக்கக் காய்ச்சிய இரும்பு தான்
பட்டை ஆகிறது
பட்டுத் தேறிய மனம் தான்
பக்குவப் படுகிறது

வாய்ப்புக்காக காத்திருக்காதே
உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்
கொள்...

தொகுப்பு : G.சந்தியா
இரண்டாம் ஆண்டுஇளங்கலை வரலாறு

## பயணம்



பயணங்கள்
சில காயங்களை
மறைப்பதற்காகவும்
சிலரால் ஏற்பட்ட காயங்களை
மறப்பதற்காகவும்

## வாழ்க்கை

பிரச்சனைகள்
நிரந்தரமானது
தீர்வுகள் தான்
தற்காலிகமானது



## கண்ணீர்


கண்ணீருக்கு காரணங்கள்
தேவையில்லை
சிலரின் மௌனங்கள்
போதுமானது

## காயம்

காயங்கள்
ஒன்று ஊனமாக்கும்
இல்லையென்றால் ஊமையாக்கும்

## பணம்

பணமில்லா பை
பாடங்களையும்
சில(ரின்) வேடங்களையும்
கற்றுக் கொடுத்து விடும் காதல்
காட்சியுடன் சில
நினைவுகள்
கண்ணீருடன் பல
இரவுகள்



சா.ஷாயின்பாஷா
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## இராணுவ வீரனும் மகளும்

வழி அனுப்பினேன்
கைகாட்டி
காலமெல்லாம்
கட்டி அணைத்திருக்க
நினைத்தவனை
கரம் பிடித்து நடக்கவில்லை
கண்ணாம்பூச்சி ஆடவில்லை
கதைகள் பல பேசவில்லை
மார் சாய்ந்து உறங்கவில்லை
மகளாய் காத்து நிற்கின்றேன்



என்றோ வருகின்றான்
தென்றலாய்
அறிவிப்பில்லாமல் பறக்கின்றான்
புயலாய்
பாதுகாவலனாய்
அவன் இருப்பதால்
என் கனவில்
அவன்
அவன் காவலில்
பாரதம்

நா.நேசிகா
மூன்றாம் ஆண்டுஇளங்கலை வரலாறு

## கல்லூரிக் காலம்



என்றும் வாசிக்க விரும்பும் கவிதை
கல்லூரி நாட்கள்
கடந்து வந்த நாட்களை காட்டிலும்
கரையாத நினைவுகள் அங்கு அதிகம்
விடுதியில் சேர்ந்த நாள் முதல்
விடுமுறைக்கு வந்த நாள் வரை
விடுபடாதது உன்னுடனான பந்தம் - அந்த
விண்ணுலகம் சென்றாலும்
மீண்டும் அக்கவியுடன் இணையவே
வரமொன்று வேண்டி
சிறகடிக்க மறந்து
நான்கு சுவற்றுக்குள்
நாட்களை கடத்துகிறது
என்றும் உன் வாசலை நோக்கியே
எங்களின் தேடல்



R.சரண்யா
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## அழகு குறிப்புகள்

பருக்களை போக்க அழகு குறிப்பு :

தினமும் 2 முறை தண்ணீரை சூடுபடுத்தி அதில் ஆவிப் பிடித்து வந்தால் பருக்கள் வராமல் தடுக்கலாம். தினமும் சீரகத் தண்ணீர் குடித்து வந்தால் முகத்தில் பருக்கள் வராது

குதிக்கால் வெடிப்பு மறைய குறிப்பு :

மா இலையில் உள்ள பாலை, வெடிப்பு உள்ள பாதங்களில் தடவி வந்தால் ஒரே வாரத்தில் நல்ல பலன் கிடைக்கும்.

இளநரையை குணப்படுத்த குறிப்பு :

வாரத்தில் 2 முறை முட்டையின் வெள்ளை கருவை மட்டும் எடுத்து தலையில் தடவி வந்தால் இளநரை மறையும்

கு.புகழரசி
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு



## கல்வி

கல்வி என்பது வெறும்
மூன்றெழுத்து தான்
ஆனால் மனிதர்களின்
தலையெழுத்தை மாற்றும்
எழுத்து...
கல்வி இல்லையேல்
காரியம் இல்லை
காரியம் இல்லையேல்
ஊதியம் இல்லை
ஊதியம் இல்லையேல்
வாழ்க்கை சாத்தியம் இல்லை
பெருமைக்காகத் தேடிப் பெறுவது
அல்ல கல்வி
பெற்றதைக் கொண்டு பெருமை தேடிக்
கொள்வது கல்வி



க.சஞ்சய்
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## பற

இவ்வுலகமே ஒரு சிறைச்சாலை
நீ முடிவு செய்
சிறைக்கைதியாக வேண்டுமா - இல்லை
சிறகடிக்கும் பறவையாக வேண்டுமா
எல்லோரும் உன்னை சிறகுகள் இருந்தும்
சிறையில் இருக்கிறாயே என்று
கேலிகளை செய்தாலும் கூட
உன்னை நிரூபிக்க
சிறையை உடை
சிறகுகள் முறியும் வரை பற
பற




ச.பூமிகா
முதலாம் ஆண்டு இளங்கலை வரலாறு

## ஆச்சரியமே

மனித வாழ்வு ஒரு குட்டி
ஆச்சரியமே
ஆச்சரியத்தின் மிச்சத்தில் பிறப்பும் இறப்பும்
ஓர் சிறிய நிகழ்வு மட்டுமே
நிகழ்வின் இடையில் ஆத்மாவின் ஆசைகள்
பொன்னாசை, பெண்ணாசை, பேராசை
என்ற நாடகமாகிறது
நாடகத்தின் இறுதியில் ஆத்மாக்களும்
தொடர்வதில்லை
ஆசைகளும் தொடர்வதில்லை

மு.கவிந்திரன்
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு



## இயற்கை

தினந்தோறும் காணும் அழகு
ஓவியம் இயற்கை... இவ்வுலகையே
வியக்க வைக்கிறது உன் அழகு
புல்வெளி மேல் படர்ந்திருக்கும்
பனித்துளிகள் அழகு
சில்லென்றுதூறும் மலைச்சாரல் அழகு
மரங்கள் ஒன்றோடு ஒன்று
இணைந்து பாடும் இன்னிசைஅழகு...
மழைக்காலங்களில்
மாலையில் வரும் வானவில்அழகு
வண்ண வண்ணங்களாய்
பூக்கும் பூக்கள் அழகு

B.ஹரிஹரன்
இரண்டாம் ஆண்டு இளங்கலை வரலாறு



## பசியாற்றுவித்தல் என்னும் இலாபம்

வள்ளுவனுக்கு அடுத்த வாய்மொழி
வள்ளலாரின் சிந்தனை மொழி
அவன் வழி நடந்து பார்
பிறக்கும் ஓர் புது வழி

தானம் கொடுப்பதே தனம் என்றான் அவன்
தாகம் தீர்க்க ஓர் தண்ணீர்ப் பந்தல்
வைத்துப் பார்
அதுவும் தானம் தான் என்கிறேன் நான்

கருணை வடிவானவனே கடவுள்
என்றான் அவன்
கருணையுடையவன் எல்லாம்
கடவுள் தான் என்கிறேன் நான்

வாடிய பயிரை கண்ட போதெல்லாம்
வாடினேன் என்றான் அவன்
வாடிய பயிர்கள் மட்டுமல்ல
வாடிய வயிறும் என் நாட்டில் இல்லையென்று
நாட்டை வளமைப்படுத்திடு என்கிறேன் நான்

நிழலின் அருமை வெயிலில் தெரியும்
பசியின் அருமை வறுமையில் தெரியும்
வள்ளலார் வழி வாழ்ந்து பார்
நாட்டில் வறுமைகள் குறையும்

வள்ளுவனுக்கு அடுத்த வாய்மொழியே
வள்ளலாரின் சிந்தனை மொழி
அவன் வழி நடந்து பார்
பிறக்கும் ஓர் புது வழி

க.யுவஸ்ரீ
மூன்றாம் ஆண்டு இளநிலை வணிகவியல்

---

## அம்மா



தான் கஷ்டப்பட்டு நம்மை
கஷ்டப்படுத்தாமல்
வளர்த்த தாயை
கஷ்டப்படுத்தாமல்
வாழ வைப்பது நம் கடமை

காயங்கள் ஆறிப்போகும்
கற்பனைகள் மாறிப்போகும்
கனவுகள் கலைந்து போகும்
என்றுமே மாறாமல் இருப்பது
தாய் நம் மீது கொண்ட பாசமும்
நாம் தாய் மீது கொண்ட பாசமும்

பேசியும் புரியாத
உறவுகளுக்கு மத்தியில்
பேசாமல் புரிந்து
கொள்ளும் உறவு "அம்மா"
கேட்டும் கொடுக்காத
தெய்வங்களுக்கு மத்தியில்
கேட்காமல் கொடுக்கும்
தெய்வம் "அம்மா"

S.சூரியபிரகாஷ்
இரண்டாம் ஆண்டு இளங்கலை வரலாறு


## அம்மா

உயிருக்குள் அடைகாத்து
உதிரத்தை அமுதாக்கி
கருவறையில் என்னை சுமந்தவளே
ஊன் தந்தாய்
உதிரம் தந்தாய்
உயிர் தந்தாய்
நானே உன் உலகம்
என்று ஆனந்தம் அடைந்தாய்
உன் சுகம், துக்கம், பசி, அழகு
ஆகியவற்றை என்னால் இழந்தாய்
நான் உன் துயரம் என்று எண்ணி
என்றும் என்னை இழக்கவில்லை
உன்னால் நான்
உன் உயிராய் நான்

தி.மகேஸ்வரி
முனைவர் பட்ட ஆய்வாளர்
வணிகவியல் துறை



## விவசாயி



உலகம் தன் பசியாற
தன்பசியைத்தான் மறந்தானய்யா
நான் சோறுண்ண
அவன் பாதம்தான் புண்ணாக நோகுதய்யா
என் விரல்கள் சோறு தீண்ட
அவன் உடல்தான் சேறு தீண்டுமய்யா
புயலடிச்சுப் போனாலும்
வயலடிக்க மறவாத மனிதனய்யா
பயிர்க்கடன்தான் பாதியில் நின்னாலும்
எம்பசிக்கடன் தீர மறவாத தெய்வமய்யா
களைப்பறியா கடவுளய்யா
என் விவசாய மக்களய்யா

R.சஞ்சனா
முதலாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்


## தாய்

தன் உயிரை பாதியாக்கி அதிலே
உனக்கொரு உருவம் கொடுத்தவள் தாய்
உன் உயிரை தன் உயிராக்கி
தன் துன்பத்தை விடுத்து உன்
துன்பத்தை துடைப்பவள் தாய்
தனக்கென ஆசை ஏதும் உருவாக்கிடாமல்
உன் ஆசையை தன் ஆசையாக்குபவள் தாய்
அப்போ கருவிலே உன்னை சுமந்தவள் தாய்
இப்போ நிஜத்திலே நிழலாய் சுமப்பவள் தாய்



நா.ராமச்சந்திரன்
இரண்டாம் ஆண்டு
இளங்கலை வரலாறு


## கல்வி



மேகத்தை நேசித்தேன்
கலைந்து விட்டது
நிலவை நேசித்தேன்
தேய்ந்துவிட்டது
மின்னலை நேசித்தேன்
மறைந்து விட்டது
ரோஜாவை நேசித்தேன்
உதிர்ந்து விட்டது
கல்வியை நேசித்தேன்
என்னைக் கரை சேர்த்துவிட்டது

P.வினிஷா
முதலாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்

## ரோஜா




கோடி பூக்களை என் கண்கள்
இரசித்தாலும்
இலட்சம் மலர்கள் என் அருகே
வசித்தாலும்
ஆயிரம் மலர்கள் மனதிற்கு
பிடித்தாலும்
அந்த
ஒரே ரோஜாவிற்காக மட்டுமே என்
இதயம் ஏங்குகிறது

ஆ.ருத்ரமூர்த்தி
இரண்டாம் ஆண்டு
இளங்கலை வரலாறு

## உதிரிப் பூக்கள்

பல வண்ணங்களில் நாங்கள்
இருந்தாலும் எங்களுக்குள்
வர்ணப் பிரிவுகள் இல்லை
மனங்களில் வேறுபாடு
இருந்தாலும் எங்களுக்குள்
மத வேறுபாடு இல்லை
வீழ்வது எங்களுக்கு புதிதல்ல
கோயிலில் அர்ச்சனைக்காக வீழ்கிறோம்
திருமணத்தில் இருமனம் இணைய
வாழ்த்தி வீழ்கிறோம்



சவ ஊர்வலத்தில் வழியனுப்ப வீழ்கிறோம்
வீழ்வது எங்களுக்கு புதிதல்ல
வாழ்வது தான் புதிது
நாங்கள் வாடுகிறோம் பறிக்கப்படுவதால்
நாங்கள் மலர்கிறோம் உதிர்வதற்கு
காகிதப் பூக்களின் கவர்ச்சி
எங்களிடம் இல்லைஆனால்
உயிர்ஈர்ப்பு விசை
எங்களிடம் உள்ளது


ஆ.நந்தகுமார்
இரண்டாம் ஆண்டு
முதகலை தமிழ் இலக்கியம்

## காவிரி நீர்




தேர்கொடுத்து
முல்லையினம்
காத்த
தமிழினத்திற்கு
நீர் - கொடுத்து
காக்காத
கர்நாடகயினம்

## அமாவாசை



நிலவுப் பெண்ணை
தினந்தினம்
தட்சணை கேட்பதால்
கொடுத்து
கொடுத்து தேய்ந்து
அங்கக்
குறை நிலவாக்கி
தாய் வீட்டிற்கு
அனுப்புகின்றனர்
சீதனம் கொண்டுவர

## நிலா



வான் முகிலின் - சதி
வலைக்குள்
சிக்குண்ட
சிறைக்கைதி

## ஆகாயம் உன் அருகில்



இளைஞனே
நீ நாளைய
நாட்டின் சரித்திர தலைவன் என்ற
நம்பிக்கைக்கு - உன்
உழைப்பை உரமாக்கு
உன் வரவிலாவது - நாடு
இமயமாய் உயரட்டும்
நீ
உள்ளத்தில்
உனக்கென ஒரு பாதையைத்
தனதாக்கிக் கொள்
ஆகாயம் - உன்
அருகில் ஆர்ப்பரிக்கும்



முனைவர் சு.பொன்னையன்
உதவிப் பேராசிரியர்
வணிகவியல் துறை


## நேர்மை



இங்கு
தளர்த்தப்படுவதுமில்லை
தவிர்க்கப்படுவதுமில்லை
விதிகள்

## விவசாயி நிலம்



கூறுபோட்ட
நிலங்களில்
தெரியாது
அது
நொறுக்கப்பட்ட
இதயத்தின் பிளவுகள்
என்று

## காதல்



கண்கள்
பரிமாறிக்கொள்கிறது
உணர்வுகளை
கம்பியில்லாத்
தந்திகளால்

## காதல்



கரை தாண்டியும்
சேரவில்லை
அலைகளால்
தழுவிச் செல்லும்
காற்றாய்
பயணிக்கிறது
கண்ணீர்த் துளிகளாய்

## நட்பு



பொய்கள்
எனத்
தெரிந்தும்
தொடர்கிறது
பயணம்
கேள்விக்குறிகளாய்???


முனைவர் இரா.சங்கர்
உதவிப் பேராசிரியர் மற்றும்
துறைத் தலைவர்
கணினி அறிவியல் துறை

## விடுகதைகள்

நிலத்தில் முளைக்காத செடி, நிமிர்ந்து நிற்காத செடி அது என்ன? தலைமுடி

தலையில் கிரீடம் வைத்த தங்கப் பழம் அது என்ன? அன்னாசிப் பழம்

உடம்பு முழுவதும் முள் அது என்ன? சிப்பு

கையும் இல்லை, காலும் இல்லை, ஓடிக் கொண்டே இருப்பேன் நான் யார்? நேரம்

வாயில் இருந்து நூல் போடுவான் மந்திரவாதி இல்லை. கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை. வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? சிலந்தி



வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி அவள் யார்? முட்டை

மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு ரத்தம் கூட வராது அது என்ன? ஈசல்

உயிர் இல்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு அது என்ன? பாய்

கசக்கிப் பிழிந்தாலும் கடைசி வரை இனிப்பான் அவன் யார்? கரும்பு

சின்ன கதவுகள், இலட்சம் முறை மூடித் திறந்தாலும் ஓசை வராத கதவுகள் அது என்ன? கண் இமைகள

தொகுப்பு : க.ஈஸ்வரன்
மூன்றாம் ஆண்டுஇளங்கலை வரலாறு

---


## வானமும் உயரமும்

முன் ஒரு காலத்தில் ஒரு மூதாட்டி தினந்தினம் மோரு விற்று அதில் கிடைக்கும் வருமானத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாள். அந்தக் காலத்தில் வானம் பூமிக்கு மிகவும் அருகில் இருந்தது. மனிதர்களும் மரம், செடி கொடிகளும் சிறிதாக இருந்தன. தினமும் வானம் இடித்து மோர்க்குடம் கவிழ்ந்து போய்விடும். இதனால் கிழவிக்கு மிகவும் கோபமாக இருந்தது. ஒரு நாள் என் மோரைக் கொட்டி என் பொழப்ப கெடுக்கும் வானமே. நீ பூமியிலிருந்து எட்டு பத்து வண்டி நிறைய ஏற்றப்பட்ட நூலைப் பிரித்து நீட்டினால் எவ்வளவு தூரம் வருமோ அவ்வளவு மேலே செல்ல வேண்டும் என்று சாபமிட்டாள். அன்றையிலிருந்து வானம் கண்ணுக்கெட்டாத தூரத்திற்குப் போய் விட்டது.

B.கிருஷ்ணவேணி
மூன்றாம் ஆண்டுஇளங்கலை வரலாறு

---

## அலைபேசி



சில புறத் தேவைகள்
நிறைவேறி வருவதால்
காலம் பற்றிய சிந்தனை
நமக்கு வருவதில்லை
காலம் கடந்து விடும்
வாய்ப்புகளும் அதைப் போலவே

முனைவர் இரா.மகேஸ்வரி
கௌரவ விரிவுரையாளர்
தமிழ்த் துறை

## உழைப்பே உயர்வு தரும்




ஒவ்வொரு இரவுக்குப் பின்னும் ஓர் விடியல் உண்டு. ஆனாலும் இன்றயை விடியல் மிக அழகாக இருப்பதாக திவ்யாவிற்கு தோன்றியது. ஏனெனில் தனது செல்லமகள் இன்று முதன் முதலாக வங்கிக்கு வேலைக்கு செல்கின்றாள். அவளுக்கு தேவையான விசயங்களை எல்லாம் செய்து கொடுத்து முத்தமிட்டு வழியனுப்பிய திவ்யாவிற்கு விழிகளில் ஆனந்த கண்ணீர் வழிந்தது. விழிகளை துடைத்தபடி வீட்டிற்குள் சென்றவளுக்கு எண்ணங்கள் பின்னோக்கி ஓடின.

வீட்டில் செல்லமாக வளர்ந்தவள் திவ்யா பத்தொன்பது வயதிலே காதலித்து மணந்தவள். சில நாட்கள் சென்ற பின்தான் தெரிந்தது கணவன் குடிகாரன் என்று அடுத்தடுத்து இரு குழந்தைகள் குடிப்பழக்கத்தால் வீட்டில் வறுமை தாண்டவம் ஆடியது. உறவும் சுற்றமும் மெல்ல ஒதுங்கி இடித்துரைக்க தொடங்கின. ஆனாலும் மனம் தளராது.வறுமையோடு போராடினாள். வேலைக்குச் சென்றாள். நல்ல கல்வி கொடுத்து குழந்தையை வளர்த்தாள். இன்றும் வேலைக்குச் செல்கின்றாள். ஆனாலும் வென்றுவிட்ட உணர்வு மனமெங்கும் நிறைந்து இருந்தது. உழைப்பு உயர்வு தரும்.

நா.நேசிகா
மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

---

## பாரதியும், பாரதமும்



பாரதியவன் பாரதத்தை
அவன் வரிகளிலே படைத்து வைத்தான்
இன்று சுதந்திரமாய் வாழ்வதற்கு
பல கவிகளெல்லாம் தொகுத்து வைத்தான்
என் சிறகை ஒடித்து மடித்து வைத்த
நாட்களெல்லாம் மறந்து விட்டு
புது விடியல் ஒன்றைத் தந்திடவே
புதுமைப் பெண்ணாய் பிறந்துள்ளேன்
ஓர் புரட்சி செய்ய பிறந்துள்ளேன்
உழுதுண்டு உழைத்தவனின்
வியர்வையெல்லாம் விதையாவதைப் போல்
முண்டாசுக் கவிஞனவன்
முயற்சியெல்லாம் முளையாகும்

பட்டங்களும் சட்டங்களும்
இன்று பெண்களுக்கு பல திட்டங்களும்
அன்றே அவன் வரிகளிலே வகுத்து வைத்தான்
பலர் கண், செவிகளெல்லாம் திறந்து வைத்தான்
பாரதி அவன் இருந்திருந்தால்
அவன் பாடல்களால் உரைத்திருப்பான்
அதை உரைத்திடத் தான் மகள் என்னை
நல் கவி தொகுக்க அனுப்பியுள்ளான்
என் எண்ணங்களில் எழுத்தெடுத்து
அவன் வழியினிலே ஓர் கவிதொடுத்து
பேதை இவள் உணர்த்துவதோ
பாரதி கண்ட கனவைத் தான்

க.யுவஸ்ரீ
மூன்றாம் ஆண்டு இளநிலை வணிகவியல்

---

## நட்பு

கவிதை என்பது யோசிப்பது
காதல் என்பது நேசிப்பது
நட்பு என்பது சுவாசிப்பது
என்றும் சுவாசிப்போம்

பழகும் முன் தனிமை
பழகிய பின் இனிமை
பிரிவு என்பது கொடுமை
பிரிந்தால் தான் தெரியும்
நட்பின் அருமை




கு.பூவரசன்
முதலாம் ஆண்டு
இளநிலை கணினி பயன்பாட்டியல்

முன்னுரை

ஒருநாட்டின் முதுகெலும்புவிவசாயம் ஆகும். விவசாயம் உணவுக்கு மட்டுமல்லாது அதைச் சார்ந்த தொழிலுக்கும் உதவுகின்றது. விவசாயத்தின் முக்கியத்துவத்தை அறிந்ததால் தான் பண்டையகாலம் முதல் இன்றுவரை விவசாயத்திற்கு ஒவ்வொரு நாடுகளும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.



"சுழன்றும் ஏர்ப் பின்னதுஉலகம் அதனால்
உழந்தும் உழவேதலை" என்பது வள்ளுவர் வாக்கு.

ஒருமனிதனிற்குஅடிப்படைத் தேவைகளாகவிளங்குகின்றஉணவு,உடை,உறையுள் ஆகியவற்றில் மனிதன் உயிர் வாழ்வதற்குஉணவுமிகஅவசியமானது. அதிகரித்துவரும் மக்கள் தொகைக்குஏற்பமக்களின் தேவைகளும் அதிகரித்துவருகின்றன. இதனைநிவர்த்திசெய்வதற்குவிவசாயத்தில் தொழில்நுட்ப இயந்திரங்கள் மூலம் உற்பத்திகள் அதிகப்படுத்தப்படுகின்றன.

விவசாயத்தின் முக்கியத்துவம்

உணவு இல்லையேல் மனிதனில்லைஎனும் நிலையில், அவ்வுணவை மனிதர்ளுக்கு அள்ளித்தருவதில் முதன்மையான இடத்தைவகிப்பதுவிவசாயம். அதுபோலவே நாமும் "விவசாயம் என்பதுகீழ் தரமானதொழில் இல்லை,உலகில் எல்லாதொழிலையும் விடசிறந்த தொழில் விவசாயம் ஆகும்" என்பதை புரிந்துகொள்ளவேண்டும். நாமும் எவ்வளவு பெரியதொழில் செய்துஎவ்வளவுதான் சம்பாதித்தாலும், தமதுபசியை ஆற்றவேறுதொழில் மூலம் நமக்கு உணவுஉற்பத்திசெய்யமுடியாது. விவசாயம் என்பதுஉலகத் தொழில்களின் தாய் ஆகும். ஒருநாட்டின் முதுகெலும்பாகவிவசாயம் உள்ளது. அந்தமுதுகெலும்பு இன்றுஅழிந்துபோகும் நிலைமைக்குத்தள்ளப்பட்டுவிட்டது. விவசாயம் அழிந்து விட்டால் பெருகிவரும் உலகமக்களின் பசியைஎவ்வாறுபோக்கமுடியும்? செயற்கைஉணவுகள் மூலம் அதிகளவுநோய்வாய்ப்படவாய்ப்பிருக்கிறது. சீனா, ரஷ்யா,மெக்சிக்கோ,பிரான்ஸ் இவ்வளவுஏன் தொழில்நுட்பநாடான ஜப்பானும் விவசாயத்திற்குமுக்கியத்துவம் அளிக்கும் நாடுகளில் முதல் ஐந்து இடத்தில் உள்ளது. வளர்ந்துள்ள பெரியநாடுகளே விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறதுஎன்றால் அனைத்துவளமும் பொருந்தியநம் நாட்டில் நாம் விவசாயத்திற்குமுக்கியத்துவம் கொடுப்பதுஅவசியம் ஆகும்.

விவசாயிகளின் முக்கியத்துவம்

"உழுவார் உலகத்தார்க்குஆணிஅஃதாற்றாது
எழுவாரைஎல்லாம் பொறுத்து"

அதாவதுஉழவர்களேநம்மைத்தாங்கிநிற்பவர்கள் ஆவார்கள். உழவர்கள் சேற்றில் கால் வைக்காவிட்டால் நாம் சோற்றில் கை வைக்கமுடியாது. நம் அனைவருக்குமேசோறுபோடும் விவசாயி,அவன் ஒருவேளைசாப்பிடவே கஷ்டப்படுகின்றான். எங்காவதுஉலகில் ஒருவிவசாயி,விவசாயத்தின் மூலம் பணக்காரன் ஆகியிருக்கிறான் என்றுசெய்தி இருக்கின்றதா? இல்லவே இல்லை. எந்தவிவசாயியும் பணக்காரன் இல்லை,சிறுகுடிசையில் வாழும் ஏழையாகவே இருக்கின்றான். தான் உண்ணாவிட்டாலும் உலகத்திற்கு உணவுகொடுக்கும் விவசாயிஎன்றுமேவிவசாயத்தைவிட்டுவிடுவதில்லை.

இயற்கைவிவசாயமும் இன்றையவிவசாயமும்

பண்டையகாலத்தில் நம் மூதாதையர்கள் பல்லாண்டுகாலம் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தனர். காரணம் இயற்கைவிவசாயமுறை,அதாவதுஎவ்வித இரசாயனங்கள் கலக்காமல் தூய உணவுகளைவிளைச்சல் செய்ததன் மூலம் நோய் நொடி அற்ற ஆரோக்கியமான வாழ்வைவாழ்ந்தனர். இயற்கைபீடைக் கொள்ளிகளும், இயற்கை கிருமி நாசினிகளுமே பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்றையவிவசாயத்தில் பெறும் உணவேவிஷமாகிறது. காரணம் நச்சுப் பதார்த்தங்கள் கலந்தகிருமிநாசினிகள்பயிர்களுக்குப் பயன்படுத்தப படுகிறது. சேதனபசளைகளுக்குப பதிலாக, அசேதனபசளைகள் பயிர்களுக்குப பயன் படுத்தப்படுவதால் பயிர்களில் இரசாயனங்கள் கலந்துபுற்றுநோய்கள் போன்ற கொடிய நோய்களுக்கு இந்தபரம்பரைஅடிமையாகிவிட்டது.

விவசாயத்தின் வளர்ச்சி

பண்டைய கால விவசாய முறைகள் அக்கால உணவுத் தேவைப்பாட்டை பூர்த்திசெய்வதற்கு போதுமானதாக இருந்த போதும், அதிகரித்துவரும் சனத்தொகைப் பெருக்கம் மற்றும் மக்களின் தேவைப்பாட்டிற்கு ஏற்றவாறு விவசாய முறைகளான வைபடிப்படியாக மாற்றமடைந்து இன்று அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்ளும் அளவிற்கு இவ்வுலகம் முன்னேறியுள்ளது. தற்போதுஉழவு இயந்திரங்களில் கலப்பைகளைப் இணைத்துவயலைஉழுதல், இயந்திரங்களைப் பயன்படுத்தி அறுவடைசெய்தல் எனதொழில்நுட்பரீதியிலான இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயமானது இலகுவாகவும் விரைவாகவும் நடைபெறுகின்றது. அவ்வாறு செய்வதோடு மட்டுமின்றி அதனை வேறுநாடுகளிற்கு ஏற்றுமதி செய்யவும் முடிகின்றது. இவ்வாறு விவசாயமானதுபடிப்படியாகவளர்ச்சியடைந்து இன்று தொழில்நுட்ப மயமாகமாறியுள்ளது.

விவசாயத்தில் தொழில நுட்பம்

இன்றையகாலகட்டத்தில் விவசாயத்தில் பலதொழில்நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. தொழில்நுட்பத்தால் உருவான உபகரணங்கள் மட்டுமின்றிஅதிஉச்சகண்டுபிடிப்பாகவிவசாயத்தின் அடிப்படை தேவைப்பாடுகளான மண்,உரம் போன்றனவற்றின் பயன்பாடின்றிவிவசாயம் மேற்கொள்ளும் முறைகள் கூட அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

உதாரணமாகஅரேபியாநாடுகள், ஜப்பான் மற்றும் அமெரிக்காபோன்றநாடுகளில் நிலப்பரப்புக்கள் குறைவாகவுள்ளபிரதேசங்களில் நீரின் மீது விதைகளை மிதக்கவிட்டு நீரில் காணப்படும் ஊட்டச்சத்துக்களைப் பயன்படுத்தி பயிர்களைவளரச் செய்யும் முறைவெற்றி கரமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

நவீனவிவசாயத்தில் தொழில் நுட்பத்தின் நன்மைகள்

விவசாயத்தில் கூலிஆட்கள் பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை முதலான சவால்களை நவீனதொழில்நுட்பம் மூலம் சமாளிக்கலாம். நிலத்தை உழுதல், வரப்பு அமைத்தல், நாற்றுநடுதல், களைஎடுத்தல், விவசாயக் கழிவுகளை உரமாக்குதல் முதலான பல செயற்பாடுகளை இயந்திரம் மூலம் விரைவாக செயல்படுத்தலாம். புதியபுதியபயிர்களின் உருவாக்கம் தோன்றியுள்ளது. விளைச்சலைஅதிகப்படுத்தலாம். உரம்,மண் போன்றனவும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகின்றது.

முடிவுரை

விவசாயத்தில் தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்தொடர்பான அறிவை அனைவரும் பெற்றுக் கொள்வதனூடாகவிவசாயநடவடிக்கைகள் இலகுவான ஒன்றாக மாற்றமடைந்து. அழிந்துவரும் விவசாயம் மீளகட்டியெழுப்பப்படஉதவியாக இருக்கும். பண்டையகாலம் முதல் வளர்ச்சிஅடைந்துவருகின்றவிவசாயமானது இன்று நவீனவிவசாய காலகட்டத்தில் சிறப்புபெற்றுவருகின்றது. விவசாயத்தை நவீன மயப்படுத்தி நவீன விவசாயத்தை மேற்கொள்வதன் மூலம் பலநன்மைகளைப் பெறமுடிகின்றது. இன்றுசனத்தொகைப் பெருக்கத்தினால் உற்பத்தி அதிகரிப்புஅவசியமாகின்றது. இதனைநவீனதொழில்நுட்பம் சிறப்பாகமேற்கொண்டுவருகின்றது. பழையனகழிதலும் புதியனபுகுதலும் மரபாகும். அதற்கிணங்கநவீனவிவசாயம் சிறப்புப் பெறுகின்றது.

விவசாயத்தைகாப்போம்..?

விவசாயிகளைமதிப்போம்.!

முனைவர்இரா. சங்கர்
உதவிப்பேராசிரியர்மற்றும் துறைத் தலைவர்
கணினிஅறிவியல் துறை



## Literature

Literature is not only about Education
It is also about knowledge and wisdom of life
Literature is not only about rules
It leads us into a whole world
Literature is a pleasure and joy to all
To those, who read it and those who create it
My feelings and emotions find expression
Though all that's read in literature
Whenever I feel lonely, I surrender myself
At the feet of literature
And I get solace and comfort
that I seek.



## The most powerful weapon

We have to fight but
don't need a hammer
We have to prove, who we are but
don't need a witness
We have to question those who do wrong but
don't need any law points
We have to do good to others but
don't need any publicity
But, why should we do all this?
does it mean anything?
We do it simply because, we are answerable
for our own conscious
We do it just because, we are accountable
for our own soul
A clear conscious and a pure soul
is the strongest weapon
That can change mankind and bring
peace among nations





A.Nimod
III B.A. English Literature

## SWACHH BHARAT ABHIYAN

Cleanliness makes the country beautiful, so each home and society has to be kept clean.

When there is both inner and outer cleanliness, it approaches Godliness. Swachh Bharat Abhiyan is one of the most successful missions in India.

This mission was started to honour Mahatma Gandhi's vision of clean India. It was launched by honourable Prime Minister of India, Shri Narendra Modi on 2nd October 2014. Clean City and a Green City, that is our Dream City.

**K.Divya Sherin**
II BCA.

## SUCCESS IN LIFE




To laugh often and much
to win the respect of intelligent people
and the affection of children
to earn the appreciation of honest critics
and endure the Betrayal of false friends
to appreciate the Beauty
to find the Best in others
to leave the world a Bit Better, whether
by a healthy child, a garden patch
or a Redeemed social condition
to know even one life has breathed
easier because you have lived.
This is the real success in one's life.




**K.Elakkiya**
III B.A. History

## WINGS OF KNOWLEDGE (READY TO FLY)


College is a place where you are trained to fly on the wings of knowledge. Bigger the wings higher the flight. Success is like the sky, so vast and high. There are storms and cyclones that may destroy you. Only strong and enormous wings will be a shield to protect. We have to fly like an eagle. An eagle will normally fly below the clouds but when there are rain or storm, the eagle will fly above the clouds. The eagle is not afraid about the rain or lightning or thunder, storm or cyclone because he has developed own enormous and strong wings.



You are born to fly high
Soar like the eagle, above the clouds
You are trained to face the storm
Flight the battle, with confidence
Be bold and fearless like the eagle
and achieve your goal against all on obstacles.

**S.Mohanraj**
Assistant Professor (T) of Commerce


## The Journey of a Girl



Girls are like birds
the most pretty things in this world.
The childhood of girls are their
golden age.
They are innocent creatures
as gentle as fairies.
But they get lost in New
relationships adapting their
ways and traditions.
They live their whole life
serving others
At the cost of their own dreams.

**A.Priyanka**
III B.A. History


# ஓவிய(ர்)ப் பக்கங்கள்




**A.DIVYA**
II- B.Sc., (Zoology)




**JOYELA**
II- B.Sc (CS)., II Shift



**S.SURIYA**
III- B.A., (History)




**P.MANIMEGALAI**
II- B.A., (History)



**E.GOWRI**
I- B.C.A.,




**S.BOOBALAN**
III - B.A., (History)




**S.ATHESH PANDIYAN**
II- B.A., (History)



**K. SASI MANGALAM**
II- B.A., (Tamil)



**R.LAVANYA**
II - B.A., (History)




**S.PURACHIKA**
I - B.A., (History)



**S.KANNAN**
III - B.A., (History)




**V.PUSHPARAJ**
I - B.Sc., (Chemistry)



**A.AHAMED LATHEEP**
III - B.A., (History)




**S.ANDRIV AKASHI**
I - B.A., (History)



**S.SURIYA**
II- B.A., (History)



**R.JAI ABISHECK**
II - B.Com.,



**J.KARTHIK**
I - B.C.A.,



**U.SEENU**
II - B.Sc., (Chemistry)



**P.KANNAN**
I - B.Com., (IB)



**A.NIVENDHAN**
I - B.Com., (IB)





**K.SASI MANGALAM**
II - B.A., (Tamil)




**S.SARNITHA**
I - B.C.A.,



**S.SHARUKHAN**
I - B.C.A.,



**K.MERITA RUBY**
II - B.A., (History)




**SOM**
I - B.C.A.,



**N.RAJKUMAR**
III - B.Sc., (Physics)



**V.ARTHI**
I - B.A., (History)



**G.SWETHA**
II - M.Com.,



**S.SANGEETHA**
II - B.Sc., (Physics)



உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற முதலைமைச்சர் கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில் இரண்டாம் பரிசு வென்ற ஹாக்கி மாணவியர் அணி



நஞ்சப்பா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முதலைமைச்சர் கோப்பைக்கான கூடைப் பந்து போட்டியில் முதல் பரிசு வென்ற கூடைப்பந்து மாணவர் அணி



முதலைமைச்சர் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் முதல் பரிசு வென்ற கிரிக்கெட் மாணவர் அணி




15-11-2022 அன்று பாரதியார் பல்கலைக்கழகம் நடத்திய கல்லூரிகளுக்கு இடையேயான சதுரங்கப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்ற மாணவர்கள்





06-04-2023 அன்று நடைபெற்ற ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா சிறப்பு விருந்தினருடன் பரிசு பெற்ற மாணவர்கள்




13-04-2023 அன்று நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா அவர்களிடம் பெருமிதச் செல்வன் விருதினைப் பெற்ற இளநிலை வணிகவியல் முதலாமாண்டு மாணவர் ச.நாகராஜ்



புதுதில்லியில் 2023 குடியரசு தின முகாமில் இளநிலை மூன்றாமாண்டு வேதியியல் துறை மாணவர் SGT பி.வசந்த் இந்திய இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே அவர்களுடன் கலந்துரையாடல்




கல்லூரியின் மகளிர் மன்றம் மார்ச் 8, 2023இல் நடத்திய சர்வதேச மகளிர் தின விழாவில் அனைத்திந்திய ஜனநாயக பெண்கள் அமைப்பின் திருப்பூர் மாவட்ட துணைத் தலைவர் திருமதி.ஆர்.மைதிலி அவர்களின் சிறப்புரை



தமிழ்நாடு அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டத்தின் கீழ் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் எமது மாணவிகளுக்கு அமைச்சர் பெருமக்கள் 05-09-2022 அன்று டெபிட் கார்டு வழங்குதல்



06-04-2023 அன்று திறந்தவெளி கலை அரங்கில் நடைபெற்ற ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழாவில் கவிஞர் முத்துநிலவன் அவர்களின் சிறப்புரை



04.11.2022 அன்று நடைபெற்ற 50 ஆவது பட்டமேற்பு விழாவில் சிறப்பு விருந்தினர், கல்வியாளர் திரு.பு.பா.பிரின்ஸ் கஜேந்திர பாபு அவர்களுடன் பல்கலைக்கழக அளவில் இளநிலைப் பட்ட வகுப்புகளில் சிறப்பிடம் பெற்றவர்கள்